754

# சிறுவர் தென்றல் வாசகம்

மூன்றாம் புத்தகம்

OFFICE OF ... BOOKS
2 DEC 1955
MADRAS
754
4-55
TB



# சிறுவர் தென்றல் வாசகம்

## மூன்றும் புத்தகம்

[மூன்றும் வகுப்பு]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 DEC 1955
MADRAS

வீ. கி. சேஷாத்திரி, பி. ஏ., எல். டி.

ராயல் பப்ளிஷர்ஸ்,

தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி.

பதிப்புரிமை] [விலை 8 அணா

# முன்னுரை

**‘சிறுவர் தென்றல் வாசகம்’** என்னும் பெயரில் எழுதப்பட்டுள்ள இந்நூல் வரிசையில் தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியரின் நல்வாழ்வுக்கான பல அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உண்மை, மெய்ம்மை, வாய்மை என்னும் முப்பெரும் பண்புகளுடன் கொல்லாமை, சமூக ஒற்றுமை, நாட்டுப் பற்று, இறைவனிடம் மாருத பக்தி, எம்மதமும் சம்மதமே என்ற மனப் பான்மை, கடமை உணர்ச்சி, தொழிலின் உயர்வு ஆகிய பண்பாடுகளை மாணவரிடையே வளர்க்கும் வகையில் அமைக்கப்பட்ட பாடங்களையும் பயிற்சிகளை யும் இந்நூல் வரிசையில் காணலாம். பாரத நாட்டின் பண்டைப் பெருமையை மீண்டும் நிலைநாட்டும் வகை யில் மாணவரிடையே இந்நூல் வரிசை பயன்படவேண் டும் என்பதே எமது அவாவாகும். அரசியலாரின் முதல் மொழிப் பாட திட்டத்தை முற்றிலும் தழுவி இயற்றப்பட்டுள்ள இந்நூல் வரிசை தமிழ்க் குழந்தை களுக்குப் பயன்படுமாயின், அதுவே எமக்குச் சிறந்த கைம்மாருகும்.

இந்நூலாசிரியர் சென்னை கல்வி இலாகாவில் மதராஸ் ஜார்ஜ் டவுன் வட்டத்தில் பள்ளிகளின் கண் காணிப்பாளராக அலுவல் பார்த்து வருகிருராயினும், இவ்வரிசையை அவரது தனிப்பட்ட முறையிலேயே இயற்றியுள்ளார்; இந்நூல் வரிசைக்கும் சென்னை அரசாங்கக் கல்வி இலாகாவுக்கும் ஒரு தொடர்பும் கிடையாது

மதராஸ்,
10-10-’55.

ஆக்கியோன்.

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | கடவுள் வணக்கம் | 1 |
| 2 | தமிழ் நாட்டின் தவப் புதல்வர் | 2 |
| 3 | நெற்பயிர் | 7 |
| 4 | பதினெட்டாம் பெருக்கு | 14 |
| 5 | ஆடிப் பதினெட்டு | 18 |
| 6 | நான் யார் ? | 21 |
| 7 | பழமொழிகள் | 24 |
| 8 | கிளி | 26 |
| 9 | வண்ணப் பசுங்கிளி | 31 |
| 10 | என் கதை | 34 |
| 11 | மாலை நேரம் | 39 |
| 12 | துப்புரவு | 43 |
| 13 | உடற் பயிற்சி | 48 |
| 14 | சுட்டபழமும் சுடாதபழமும் | 49 |
| 15 | பனி நில மக்கள் | 54 |
| 16 | பாரதியார் | 58 |
| 17 | கொட்டு முரசே ! | 63 |
| 18 | உலோகங்கள் | 64 |
| 19 | நல்ல தீர்ப்பு | 70 |
| 20 | தமிழ் நாடு | 75 |
| 21 | எங்கள் தமிழ் நாடு | 79 |
| 22 | கிராம ஆட்சி | 82 |
| 23 | போலீஸ்காரர் | 86 |
| 24 | மழை | 90 |
| 25 | நாடு செழித்தது | 95 |
| 26 | அரசனும் அமைச்சனும் | 96 |
| 27 | அன்பின் வெற்றி | 102 |
| 28 | கொன்றைவேந்தன் | 109 |
| 29 | வெற்றிவேற்கை | 110 |
| 30 | வாழ்க பாரதம் | 112 |



# 1. கடவுள் வணக்கம்

1. கல்வி அறிவொளி ஈவாய் !—செய்ய
கலையிற் புலமை அளிப்பாய் !
நல்ல ஒழுக்கம் அருள்வாய் !—தாய்
நாட்டின் மணிப்பிள்ளை ஆவேன் !

2. எல்லா உலகமும் நீயே !—வாழும்
எல்லா உயிர்களும் நீயே !
அல்லாவும் பிரமமும் நீயே !—சுத்த
ஆன்மச் சுடரொளி நீயே !

—யோகி சுத்தானந்த பாரதியார்

| | | | |
|---|---|---|---|
| ஒளி | ஈவாய் | கலை | புலமை |
| பிரமம் | ஆன்மா | சுடர் | அல்லா |

## அருஞ்சொற் பொருள்

ஒளி - விளக்கம், ஈவாய்-கொடுப்பாய், கலை-சாத்திரம், புலமை - அறிவு உடைமை, அல்லா - முஸ்

லீம்கள் வழிபடும் கடவுள், பிரமம் - இந்துக்கள் வணங்கும் முழுமுதற் கடவுள், ஆன்மம் - உயிர், சுடர் - கொழுந்து விட்டு எரியும் தீ.

### கருத்து

'கல்வி, ஒழுக்கம், கலை ஞானம், நாட்டுப்பற்று முதலான நலன்களை அளிக்கவேண்டும்' என்று கடவுளை வேண்டிக்கொள்ளுதல், இப் பாடலின் கருத்து.

### கேள்விகள்

1. குழந்தை கடவுளிடம் கேட்பவை யாவை ?
2. குழந்தையின் ஆவல் என்ன ?
3. நாட்டின் மணிப்பிள்ளையாவது எப்படி ?

### பயிற்சி

1. இந்தப் பாடலை மனப் பாடம் செய்.

---

## 2. தமிழ் நாட்டின் தவப் புதல்வர்

1. இப்பொழுது பாரத நாடு சுதந்திரம் பெற்றுள்ளது. சில வருஷங்களுக்கு முன், இந் நாடு சுதந்திரம் அடைவதற்குப் பல பெரியோர்கள் அரும்பாடு பட்டார்கள். அவர்களுள் நமது 'தமிழ் நாட்டின் தவப் புதல்வர்' என்று போற்றப்படும் **சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்** ஒருவர் ஆவார். **இராஜாஜி** என்றும் அவரை அழைப்பது உண்டு.

2. சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, சேலம் ஜில்லாவில் **ஓசூருக்கு** அருகில் உள்ள **தொரப்பள்ளி** என்னும் கிராமத்தில் **இராஜகோபாலன்** பிறந்தார். அவருடைய தந்தையார் **சக்கரவர்த்தி அய்யங்கார்;** தாயார் **சிங்காரம்** அம்மையார். இளமையில் இராஜகோபாலன் கல்வி நன்கு கற்ருர். பின்பு பெங்களூரில் உள்ள கல்லூரியில் படித்து பீ. ஏ. பட்டமும் சென்னையில் படித்து **வக்கீல்** பட்டமும் பெற்ருர்.



3. இராஜாஜி சேலத்தில் வக்கீல் தொழில் செய்து வந்தார்; 'சிறந்த வக்கீல்' எனப் பெயர் பெற்ருர். மக்கள் அவரிடம் நம்பிக்கை வைத்தார்கள். அவருக்கு அதிக வருமானம் கிடைத்தது. அப்பொழுது அவர் பொது வாழ்வில் பங்கு எடுத்துக்கொண்டார்; ஜனங்களுக்குப் பல உதவிகளைச் செய்தார். மக்கள் அவரைச் சேலம் நகரசபைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். அக்காலத்தில்,

ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பல வழிகளில் இராஜாஜி உதவி புரிந்தார்.

4. பின்பு, இராஜாஜி சென்னைக்குச் சென்று அங்கே வக்கீல் தொழிலை நடத்தி வந்தார். அப்பொழுது ஒரு சமயம் **மகாத்மா காந்தி** இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுச் சென்னையை அடைந்தார்; இராஜாஜியின் வீட்டில் தங்கினார். இருவரும் நண்பர்கள் ஆனார்கள். மகாத்மாவின் ஆணையைப் பின்பற்றி இராஜாஜி வக்கீல் தொழிலை விட்டார்; நாட்டின் சுதந்திரத்திற்குப் பாடுபடலானார். அதன் பயனாகப் பலமுறை சிறை சென்றார்.

5. காந்தி அடிகளின் தலைமையில் **உப்புப் போர்** நடைபெற்றது. **வேதாரணியம்** என்னும் ஊரை அடுத்த கடற்கரையில், இராஜாஜியின் தலைமையில் பலர் உப்பு எடுக்கப் போனார்கள். அதன் பயனாக அவருக்கு ஒன்பது மாதங்கள் சிறைவாசம் கிடைத்தது.

6. சில ஆண்டுகள் கழித்து, இராஜாஜி சென்னை மாகாணத்தின் முதல் அமைச்சராகப் பதவி ஏற்றார்; திறமையுடன் ஆட்சி செய்தார். மதுபானக் கடைகளை மூடி

னார்; ஹரிஜனங்களுக்கு ஆலயங்களைத் திறந்து வைத்தார்; கதர் ஆடைகளின் உற்பத்தியைப் பெருக்கினார்.

7. பாரதம் சுதந்திரம் பெற்ற பின்பு, இராஜாஜி மேற்கு வங்காளத்தின் கவர்னரானார்; இந்தியாவின் **கவர்னர் — ஜெனரல்** பதவியில் அமர்ந்தார். 1952-ஆம் ஆண்டில் சென்னை இராச்சியத்தின் முதல் அமைச்சராக மீண்டும் பதவி ஏற்றார். இப்பொழுது, பொது வாழ்விலிருந்து விலகி, ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார்.

8. இராஜாஜி ஏழை மக்களிடம் அன்பு உள்ளவர்; சிறந்த அறிவாளி; திறமை மிக்கவர்; பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர்; அவர் பல சிறு கதை நூல்களையும், பெரு நூல்களையும் தமிழில் எழுதியிருக்கிறார்.

| | | |
|---|---|---|
| உட்பட்டு | அரும்பாடு | தவப்புதல்வர் |
| முதன்மை | கல்லூரி | வக்கீல் |
| பட்டம் | நம்பிக்கை | வருமானம் |
| பொதுவாழ்வு | பங்கு | தேர்ந்தெடுத்தல் |
| ஒடுக்கப்பட்ட | மக்கள் | நண்பர் |
| ஆணை | பயன் | போர் |
| அமைச்சர் | மதுபானம் | ஹரிஜனங்கள் |
| ஆலயம் | உற்பத்தி | பெருக்கினார் |
| மீண்டும் | விலகி | ஓய்வு |
| அறிவாளி | திறமை | மிக்கவர் |
| வல்லவர் | பதவி | |

## அருஞ்சொற் பொருள்

உட்பட்டு - அடங்கி, அரும்பாடு - மிகு முயற்சி; முதன்மை - முதல் இடம், கல்லூரி - மேற்படிப்புக்கான கல்விக்கூடம், ஒடுக்கப்பட்ட - தாழ்த்தப்பட்ட, நண்பர் - சினேகிதர், ஆணை - கட்டளை, பயன் - உபயோகம், போர் - சண்டை, அமைச்சர் - மந்திரி, மதுபானம் - மயக்கம் தரும் குடி, ஆலயம் - கோவில், பெருக்குதல் - அதிகப்படுத்துதல், மீண்டும் - மறுபடியும்.

## கேள்விகள்

1. இராஜாஜியின் தாய் தந்தையரின் பெயர்கள் என்ன ?
2. சேலத்தில் அவர் மக்களுக்குச் செய்த நன்மைகள் யாவை ?
3. இராஜாஜி ஏன் பலமுறை சிறை சென்றார் ?
4. சென்னை முதல் அமைச்சராக இருந்த பொழுது அவர் செய்த நன்மைகள் என்ன ?
5. இராஜாஜியின் நற்குணங்கள் யாவை ?

## இலக்கணம்

**இராஜாஜி ஏழைகளிடம் அன்பு உள்ளவர் :** இதில் நான்கு சொற்கள் உள்ளன. இதில் ஒரு முடிவான கருத்து உள்ளது. ஒரு முற்றுப் பெற்ற கருத்தை வெளியிடும் சொற்றொடர் **வாக்கியம்** எனப்படும். முதல் இரண்டு சொற்களாலான 'இராஜாஜி ஏழைகளிடம்' என்ற சொற்றொடரில் கருத்து முடியவில்லை. முடிந்த கருத்துள்ள ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் ஒரு புள்ளி (.) வைக்கவேண்டும். இதற்கு **முற்றுப்புள்ளி** என்பது பெயர்.

**பயிற்சி**

1. பின்வரும் சொற்களில் ஒவ்வொன்றுக்கும் எதிர்ச் சொற்களை எடுத்து எழுது :
   நம்பிக்கை, போர், பெருக்கினர், ஓய்வு, அறிவாளி, அமைதி, சுருக்கினர், வேலை, அவநம்பிக்கை, அறிவீனன்.
2. பின்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது :
   அரும்பாடுபட்டு, மீண்டும், வருமானம், பொது வாழ்வு, முதன்மை.
3. பின்வரும் சொற்களில் விட்ட எழுத்துக்களைக் கண்டுபிடி :
   வக்—ல், உ—பத்தி, அ—வாளி, கல்—ரி, தொ—ல்.

---

# 3. நெற்பயிர்

1. நாம் உயிர் வாழ்வதற்குக் **காற்று, தண்ணீர், உணவு** ஆகிய மூன்றும் மிகவும் அவசியமானவை. நாம் சுவாசிப்பதற்குத் தேவையான காற்று எங்கும் நிறைந்திருக்கிறது. ஆறு, ஏரி, குளம் முதலான நீர்நிலைகளிலிருந்து நமக்குத் தண்ணீர் கிடைக்கிறது. ஆனல், நாம் பாடுபட்டால்தான் உணவுப் பொருள்கள் கிடைக்கும். உணவுப்பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலுக்குப் **பயிர்த் தொழில்** என்பது பெயர்; அதை **உழவுத்**



நெற்பயிர்—உழவு முதல் அரிசி வரையில்

தொழில் என்றும் சொல்வார்கள். எல்லாத் தொழில்களிலும் பயிர்த்தொழிலே முதன்மையான தொழில்.

2. **பாரத நாடு** நமது நாடு. இந்த நாட்டில் நடைபெறும் தொழில்களுள் பயிர்த் தொழிலே முக்கியமானது. பயிர்த் தொழில் செய்பவர் **உழவர்.** பயிர்த்தொழில் **நன்செய், புன்செய்** என்னும் இருவகை நிலங்களிலும் செய்யப்படும். நிலங்களுக்கு ஆறுகளிலிருந்தும், ஏரிகளிலிருந்தும் நீர் பாயும். கிணற்றிலிருந்து நீர் இறைப்பதும் உண்டு. நன்செய், நீர் தேக்கி, உழுது, சேருக்கிப் பயிரிடப்படும்; புன்செய், மழை ஈரத்தில் உழுது புழுதியாக்கிப் பயிரிடப்படும்.

3. நன்செய் நிலத்தில் **நெல், கரும்பு** முதலான பொருள்கள் விளையும். **கம்பு, கேழ்வரகு, சோளம், துவரை** முதலான தானிய வகைகள் புன்செய் நிலத்தில் பயிராகும். நமது உணவுப் பொருள்களுள் முக்கியமானது **அரிசி.** அது நெல்லிலிருந்து கிடைக்கிறது. ஆதலால், நமது நாட்டில் **நெற்பயிர்** மிகவும் முக்கியமானது. "நெற் பயிர் விளை" என்பது ஔவை வாக்கு.

4. உழவர் விதை நெல்லைக் கோட்டையாகக் கட்டித் தண்ணீரில் ஊறவைப்பார்கள்.

நெல்லில் முளை தோன்றியவுடனே, அதை ஒரு சிறு நிலப்பகுதியில் விதைப்பார்கள். சில நாட்களில் முளைகள் வளர்ந்து நாற்றுக்கள் ஆகும். அந்த நிலப்பகுதி **நாற்றங்கால்** எனப்படும்.

5. நாற்றுக்கள் வளர்வதற்குள், உழவர் வயல்களைச் சேடையாக உழுவார்கள். பின்பு தண்ணீர் பாய்ச்சி, பசுந்தாள்கள், மக்கின மாட்டுச்சாணம், சாம்பல், பிண்ணுக்கு முதலான எரு விட்டு, மண்ணுடன் நன்ருகக் கலக்குமாறு மேலும் பல முறை உழுவார்கள். பின்பு பரம்பு அடிப்பார்கள். பரம்பு அடிப்பதனுல் நிலம் சமமாகிறது ; நீர் பாய்வதற்கு வசதியாய் இருக்கிறது. இவ்வாறு சமம் செய்யப்பட்ட வயல்களில் நாற்றுக்களை நடுவார்கள்.

6. நன்செய் நிலத்திற்கு அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். வயல்களில் தண்ணீர் தேங்காமலிருந்தால் நெற்பயிர்கள் வாடிப்போகும். நெற்பயிர்களுடன் புல் பூண்டுகளும் வளரும். அவைகளுக்குக் **களைகள்** என்பது பெயர். பயிர்களுக்குப் பாய்ச்சப்படும் நீரையும், இடப்படும் எருவையும் களைகள் உட்கொள்ளும் ; ஆதலால், களைகளை அகற்ற வேண்டும்.

7. நாளடைவில், நெற்பயிர்களில் கதிர்கள் தோன்றும்; கதிர்களில் நெல் மணிகள் இருக்கும். மணிகள் முற்றிய பின், உழவர் நெற்கதிர்களைத் தாள்களோடு அறுத்து எடுப்பார்கள். இஃது **அறுவடை** எனப்படும். பின்பு, தாள்களைக் களத்தில் போட்டு, அடித்து, நெல்லையும் வைக்கோலையும் பிரித்து எடுப்பார்கள். இது **போர் அடித்தல்** எனப்படும். கிடைத்த நெல்லைத் தூற்றி, பதர்களை அகற்றி, சாக்குகளில் கட்டி, வண்டிகளில் ஏற்றி வீட்டில் சேர்ப்பார்கள்.

8. நெற்பயிர் மூன்று மாதங்களில் பலன் தரும்; ஆறு மாதங்களில் பலன் தரும் பயிர்களும் உண்டு. **கார், சம்பா, சிறுமணி** என்பவை சில நெல் வகைகள்.

9. பயிர்த் தொழிலைச் செய்வது மிகவும் நல்லது: "உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார்" என்ற பெரியோர் வாக்கை நாம் கருத்தில் வைக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| சுவாசம் | நீர்நிலை | அவசியம் |
| முக்கியம் | உழவர் | நன்செய் |
| புன்செய் | வசதி | தானியம் |
| கோட்டை | முளை | பகுதி |
| நாற்றங்கால் | நாற்று | பசுந்தாள் |
| மக்கின | சாணம் | சாம்பல் |

| | | |
|---|---|---|
| பிண்ணுக்கு | பக்குவம் | கட்டு |
| இடைவெளி | அடிக்கடி | களைகள் |
| அகற்றுதல் | நாளடைவில் | கதிர்கள் |
| தாள் | அறுவடை | களம் |
| வைக்கோல் | தூற்றி | சாக்கு |
| பலன் | வாக்கு | கருத்து |

## அருஞ்சொற் பொருள்

சுவாசம் - மூச்சு, அவசியம் - முக்கியம், வசதி - சௌகரியம், பசுந்தாள் - பசுமையான செடிகள், அகற்று - நீக்கு, கருத்து - எண்ணம்.

## கேள்விகள்

1. பயிர்த்தொழில் ஏன் முக்கியமானதாகக் கருதப்படுகிறது ?
2. இருவகை நிலங்கள் எவை ?
3. நெற்பயிர் எவ்வாறு முக்கியமாகிறது ?
4. நாற்றங்கால் என்பது யாது ?
5. நெல்லைப் பயிர் செய்வது எப்படி ?
6. 'அறுவடை' என்பது யாது ?

## தெரிந்துகொள்

| ஒன்று | பல |
|---|---|
| நாற்று | நாற்றுக்கள் |
| எரு | எருக்கள் |
| பயிர் | பயிர்கள் |
| களை | களைகள் |
| நாள் | நாட்கள் |
| முள் | முட்கள் |
| பல் | பற்கள் |

ஒரு பொருளைக் குறிக்கும் சொல் **ஒருமை** என்றும், பல பொருள்களைக் குறிக்கும் சொல் **பன்மை** என்றும் சொல்லப்படும்.

## பயிற்சி

1. கீழே சில சொற்களும், அவைகளுக்கு எதிர்ச் சொற்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை வகைப்படுத்தி எழுது:
   அவசியம், நன்செய், சில, ஆழம், சேர்த்தல், புன்செய், பல, நல்லது, அனுவசியம், உயரம், பிரித்தல், கெட்டது.
2. பின்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:
   வரிசை வரிசையாக, அடிக்கடி, புல்பூண்டு, அறுவடை, நாளடைவில்.
3. பின்வரும் கைத்தொழில்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் இரண்டு வாக்கியங்கள் எழுது:
   இரும்பு வேலை, மண்பாண்டம் செய்தல், மரவேலை.
4. கீழ்வருவனவற்றை வாக்கியம், சொற்றொடர் என்று பிரித்து எழுது:
   (1) நாம் உயிர் வாழ்வதற்கு (2) நெல் நன்செய் நிலத்தில் பயிராகும். (3) சிறு நிலப் பகுதியில் (4) களைகளை அடிக்கடி (5) நெற்பயிர் மூன்று மாதங்களில் பலன் தரும்.
5. வாக்கியங்களுக்கு முற்றுப்புள்ளிகளை இடு:
   நன்செய் நிலத்திற்கு அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும் இல்லாவிடில் பயிர்கள் வாடிப் போகும் நெற்பயிர்களுடன் புல் பூண்டுகளும் வளரும் அவைகளை அகற்ற வேண்டும்

# 4. பதினெட்டாம் பெருக்கு



1. ஒவ்வொரு வருஷமும் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் தமிழ் நாட்டில் உள்ள ஆறுகளில் எல்லாம் வெள்ளம் பெருகும். ஆறுகளில் புதுவெள்ளம் வரும்பொழுது, மகிழ்ச்சியால் மக்கள் அதைக் கொண்டாடுவது வழக்கம். ஆடி மாதம் 18-ந் தேதியன்று **பதினெட்டாம் பெருக்கு** என்னும் பண்டிகையைத் தமிழர்கள் கொண்டாடுகிறார்கள்.

2. ஆற்றில் புது வெள்ளம் வந்தால் தான் வயல்களுக்கு நீர்ப்பாசன வசதி உண்டாகும்; ஏரி, குளம் முதலான நீர்நிலைகளில் தண்ணீர் நிரம்பும். உழவர் அந்த நீரை ஆண்டு முழுவதும் வயல்களுக்குப் பயன் படுத்திக் கொள்வார்கள். ஆதலால், புது

வெள்ளம் வருவதை உழவர் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்; அந் நாளைக் கொண் டாடுவார்கள்.

2. ஆற்றங்கரைகளில் அமைந்துள்ள கிராமங்களில் வசிப்பவர்கள், இந்தப் பண்டி கையை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவார் கள். அன்று ஆண்களும், பெண்களும், குழந் தைகளும் ஆற்றில் நீராடுவார்கள்; புது ஆடை களை அணிவார்கள்; மாப்பிள்ளைகளுக்குப் புதிய உடைகளை வழங்கி, விருந்து அளிப்பார் கள். அன்று பலவகைச் சாதங்களைச் சமைத்து எடுத்துக் கொண்டு நதிக்கரைக்குச் செல்வார் கள்; அங்கே அவற்றை வைத்துக்கொண்டு சாப்பிடுவார்கள். சிறுவரும் சிறுமியரும் ஆற்று வெள்ளத்தில் காகிதக் கப்பல்களை மிதக்க விடுவார்கள். ஊரிலுள்ள மக்கள் அனைவரும் நதிக்கரையில் சந்தோஷமாகக் காலம் கழிப்பார்கள்.

4. முன்காலத்தில் மக்கள் இந்தப் பண் டிகையை வெகு சிறப்பாகக் கொண்டாடி வந் தார்கள். பலவகையான ஓடங்களில் மக்கள் ஏறி, ஆற்றில் அவற்றை வரிசையாகச் செலுத்திக் கொண்டு செல்வார்கள். அவ் வோடங்கள் சிறப்பாக அலங்காரம் செய்யப் பட்டிருக்கும். அவை அன்னம், மயில், யானை,

சிங்கம், குதிரை முதலிய உருவங்களில் அமைக்கப்பட்டிருக்கும்.

5. தமிழ் நாட்டில் உள்ள **காவிரி, தென் பெண்ணை, வைகை, தாமிரவருணி** ஆகிய நதிகளின் கரையோரங்களில் இந்தப் பண்டிகை விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெருக்கு | ஒவ்வொரு | மகிழ்ச்சி |
| கொண்டாடுதல் | பாசனம் | ஆண்டு |
| பயன் | எதிர்பார்த்து | அமைந்துள்ள |
| சிறப்பு | அணிதல் | மாப்பிள்ளை |
| சமைத்து | அலங்காரம் | விசேஷம் |

## அருஞ் சொற் பொருள்

பெருக்கு - வெள்ளம். மகிழ்ச்சி - சந்தோஷம், களிப்பு. ஆண்டு - வருஷம். சிறப்பு - மேன்மை.

## கேள்விகள்

1. தமிழ் நாட்டிலுள்ள ஆறுகளில் எப்பொழுது வெள்ளம் பெருகும்?
2. உழவர் ஏன் புது வெள்ளத்தை எதிர்பார்க்கிறார்கள்?
3. பதினெட்டாம் பெருக்கை மக்கள் எவ்வாறு கொண்டாடுகிறார்கள்?
4. முன் காலத்தில் மக்கள் இதை எவ்வாறு கொண்டாடினார்கள்?
5. இந்தப் பண்டிகை எங்கெங்கே சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது?

## இலக்கணம்

**ஓடம், கப்பல், காகிதம், வீடு, ஆறு** — இவை பொருள்களின் பெயர்கள். பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் **பெயர்ச்சொல்** எனப்படும்.

### பயிற்சி

1. பின் வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது :

ஒவ்வொரு, பெருக்கு, வரிசை வரிசையாக, அலங்காரம், எதிர்பார்த்துக்கொண்டு.

2. எதிர்ச் சொற்களை எழுது :
மகிழ்ச்சி, புதுமை, நிரம்பும், கிராமம், மிதக்க.

3. பொங்கல் பண்டிகையைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

4. பின்வரும் சொற்களின் பொருள்களைக் குறிக்கும் வேறு சில சொற்களை எழுது :

மாதம், கப்பல், ஆறு, உழவன், ஆடை, குழந்தை.

5. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களை எழுது:

(1) குழந்தைகள் புது ஆடைகளை அணிவார்கள்.

(2) பொன்னன் ஆற்றில் ஓடத்தைச் செலுத்தினன்.

(3) வள்ளி பொங்கலுக்குப் புதுப்பானை வாங்கினள்.

(4) பொங்கல் பண்டிகைக்கு வீடுகளுக்குச் சுண்ணும்பு அடிப்பார்கள்.

(5) தீபாவளியன்று பட்டாசு கொளுத்துவார்கள்.

# 5. ஆடிப் பதினெட்டு



1. ஆடிப் பதினெட்டுப் பண்டிகைக் காவேரி
ஆற்றினைப் பூசித்துப் போற்றிடுவோம்!
கூடிப் பணிந்து குலதெய்வம் காத்திடக்
கும்பிடுவோம் இனித் துன்பம் இல்லை!

2. வெள்ளப் பெருக்கினைப் பார்க்கையிலும், [அதன்
வேகத்தின் சத்தத்தைக் கேட்கையிலும்,
உள்ளம் திகைத்தொரு உண்மை [அறிவினை
ஊட்டுது தெய்வத்தைக் காட்டுது பார்!

3. காடும் மலையும் கிடுகிடுக்க அந்தக்
காட்டு மிருகங்கள் ஓட்டமிட,
'ஓடும் நதியிலே அத்தனைத் தண்ணீரை
ஊற்றுவதார்?' என்ற மாற்றம் வரும்.

4. நேற்று நடந்திட்ட மக்களின் பாதங்கள்
நீற்று நெருப்பெழக் கொப்பளித்த
ஆற்றிலே இன்றைக்கு அத்தனைத் தண்ணீர்
அப்படி வந்ததும் எப்படியோ!

5. அன்னம் அளிப்பவள் காவேரி; நல்ல
ஆடை கொடுப்பவள் காவேரி;
இன்னும் மனிதர்க்கு வேண்டிய
[இன்பங்கள்
யாவையும் காவேரி யேதருவாள்.

6. யாருக்கு எப்படி ஆனாலும் இந்த
ஆற்றங்கரையில் வசிக்கும் எங்கள்
ஏருக்கு நீர்தந்து யாருக்கும் சோறு
[ஊட்டும்
எங்கள் குலதெய்வம் காவேரி!

—நாமக்கல் கவிஞர்

| | | |
|---|---|---|
| பூசித்து | பணிந்து | குலதெய்வம் |
| கும்பிடு | துன்பம் | திகைப்பு |
| உள்ளம் | தெய்வம் | கிடுகிடுக்க |
| மாற்றம் | நீற்று | கொப்புளம் |
| அன்னம் | இன்பம் | ஊட்டும் |

## அருஞ்சொற்பொருள்

பணிந்து - வணங்கி. திகைப்பு - மயக்கம். தெய்வம் - கடவுள். மாற்றம் - பேச்சு. அன்னம் - சாதம்.

## கேள்விகள்

1. வெள்ளப் பெருக்கு நமக்கு ஊட்டும் உண்மை அறிவு என்ன ?

2. காவிரியாறு தரும் இன்பங்கள் யாவை ?

3. ஆற்றங்கரையில் வசிப்பவர்களுக்குக் காவேரி எவ்வாறு உதவுகிறது ?

## பயிற்சி

1. கோட்டிற்கு இருபக்கங்களிலுமுள்ள சொற்றொடர்களைப் பொருந்தச் சேர்த்து எழுது:

| | |
|---|---|
| தீபாவளியன்று | கட்டுச் சாதம் உண்பார்கள். |
| பொங்கல் நாளன்று | புது ஆடை உடுப்பார்கள். |
| ஆடி பண்டிகையில் | பொங்கல் இடுவார்கள். |

2. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்கவும் :

(1) பொங்கல் பண்டிகைக்கு —— என்றொரு பெயரும் உண்டு.

(ஆடிப் பண்டிகை, தீபாவளி, சங்கராந்தி)

(2) ஆடிப் பதினெட்டாம் நாளன்று —— உண்பார்கள்.

(சிற்றுண்டி, விருந்து, கட்டுச் சாதம்)

(3) பதினெட்டாம் பெருக்கு —— மாதத்தில் வரும்.

(தை, பங்குனி, ஆடி)

(4) ஆற்றங்கரையில் மரங்களும் செடிகளும் கொடிகளும்——தோன்றும்.

(வெள்ளைவெளேர், பச்சைப் பசேல், செக்கச் செவேல்)

3. நீ பார்த்த ஒரு கிராமத் திருவிழாவைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

---

## 6. நான் யார்?

1. நீ பார்த்தால் நானும் பார்ப்பேன்;
நீ சிரித்தால் நானும் சிரிப்பேன்;
என்னைக் குத்திப் பார்த்தால்,
எட்டுச் சில்லாவேன்.

(டிணகண்)

2. வாய்க்கால் வெட்டி வரப்புக் கட்டி,
ஈர்க்கு முற்றி இலை பழுத்து,
இலை முற்றிக் காய் காய்த்து,
காய் முற்றிப் பழம் ஆவேன்!

(யிற்நெபர்)

3. வண்ணான் வெளுக்காத வெள்ளை ;
மழை பெய்யாத தண்ணீர்;
குயவன் செய்யாத பாண்டம்.

(காங்தேய்)

4. பொட்டுப் போல் இலை உடையேன் ;
பொரி போலப் பூ உடையேன்;
தின்னக் காய் காய்ப்பேன் ;
தின்னாத பழம் ஆவேன் !

(கைமமுங்ரும்ர)

5. பச்சைப் பசேல் என்றிருக்கும்
பாகற்காயும் அல்ல;
முள்ளு முள்ளாயிருக்கும்
பலாக்காயும் அல்ல;
உள்ளே வெளுத்திருக்கும்
தேங்காயும் அல்ல ;
உருக்கினால் நெய் வடியும்
வெண்ணெயும் அல்ல;

(குமக்ஆணக்ய்கா)

| | | |
|---|---|---|
| சில்லு | வரப்பு | ஈர்க்கு |
| பொரி | பொட்டு | உடையேன் |

## அருஞ்சொற்பொருள்

சில்லு - ஓடு. வரப்பு - மேடான நடைபாதை, (எல்லை)

## கேள்விகள்

1. பாடத்திலுள்ள விடுகவிகளுக்கு விடைகள் எவை ?

2. உனக்குத் தெரிந்த வேறு இரண்டு விடுகவி களை எழுது.

## இலக்கணம்

1. **பொரி** என்பது நெற்பொரி அல்லது சோளப் **பொரி**; **பொறி** என்பது இயந்திரம் அல்லது தீப்பொறி. **கரி** அடுப்பு எரிக்க உதவும்; **கறி** சமைத்து உண்ணலாம்; பொரி, பொறி; எரி, எறி; பரி, பறி; அரை, அறை; இரை, இறை—இந்தச் சொற்களின் பொருள் வேறு பாட்டைத் தெரிந்துகொள்.

2.

| ஒருமை | பன்மை |
|---|---|
| நான் | நாம், நாங்கள் |
| நீ | நீர், நீங்கள் |
| அது | அவை, அவைகள் |
| இது | இவை, இவைகள் |
| எது | எவை, எவைகள் |
| அவன், அவள் | அவர், அவர்கள் |
| இவன், இவள் | இவர், இவர்கள் |

### பயிற்சி

1. கோட்டுக்கு இரு புறங்களிலுமுள்ள சொற்களைப் பொருத்து:

| | |
|---|---|
| மாம்பழம் | முள்ளுமுள்ளாக இருக்கும். |
| தேங்காயில் | இனிப்பாக இருக்கும். |
| ஆலமரம் | இளநீர் இருக்கும். |
| பலாக்காய் | நிழல் தரும். |

2. பன்மையாக்கு : பழம், பூ, இலை, பாண்டம், நான், காய்.

3. ஒருமையாக்கு : மரங்கள், தேங்காய்கள், அவர்கள், இவைகள்.

---

## 7. பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
3. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
4. உப்பில்லாத பண்டம் குப்பையிலே.
5. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
6. எறும்பு ஊரக் கல் தேயும்.
7. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
8. ஒன்றே செய்யினும் நன்றே செய்.
9. கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.
10. காலை மாலை நூலை ஓது.

11. கூழ் ஆனாலும் குளித்துக் குடி.
12. கெடுவான் கேடு நினைப்பான்.
13. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
14. நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்.
15. பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே.
16. பேராசை பெரு நஷ்டம்.
17. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
18. யானைக்கும் அடி சறுக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அகம் | அழகு | உறுதி | சிறு | சிலை |
| பண்டம் | நன்றே | கேடு | சீர் | செல்வம் |
| பந்தி | பேராசை | நஷ்டம் | முயற்சி | இகழ்ச்சி |
| அடையார் | சறுக்கும் | தேடின் | கெடுவான் | குறைவற்ற |

## அருஞ் சொற் பொருள்

அகம் –உட்புறம். பட்டம் - காற்று. உறுதி-பலம். பண்டம் - பொருள். பழமொழி -நெடுங்காலமாக, அனுபவத்தின் பயனாக வழங்கும் மொழி. சீர் - நல்ல வாழ்க்கை.

## கேள்விகள்

1. இளமையில் கல்வி கற்றல் எதைப் போன்றது?
2. கெடுவான் கேடு நினைப்பான் - இதை விளக்க ஒரு கதை சொல்லு.
3. உனக்குத் தெரிந்த வேறு நான்கு பழமொழிகளைக் கூறுக.

# 8. கிளி



1. பறவைகள் பறக்கும் தன்மை உடையவை. அவை முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரித்து இனத்தைப் பெருக்கும். பறவைகளில் பலவகைகள் உண்டு. சில வகைப் பறவைகள் மரக்கிளைகளில் கூடுகட்டி வாழும்; சில பறவைகள் மரப் பொந்துகளில் வசிப்பவை; வேறு சில பறவைகள் புதர்களில் வாழும்; மற்றும் சில பறவைகள் நிலத்தில் வாழ்பவை; நீரிலும் நிலத்திலும் வாழும் பறவைகளும் உண்டு.

2. பறவைகளுள் சில பாடக்கூடியவை; சில பறவைகள் பேசக் கூடியவை; சில ஆடும் பறவைகள். குயிலும் வானம்பாடியும் இனிமையாகப் பாடும்; கிளியும் மைனாவும்

மதுரமாகப் பேசும்; மயிலும் வான்கோழியும் அழகாக ஆடும் பறவைகள்.

3. கிளி மரப்பொந்தில் வாழும் பறவை; கோபுரங்களிலும் உயர் மாடங்களிலும் கிளி விரும்பி வாழும். அதன் நிறம் பச்சை. மரத்தின் இலைகளும் பசுமை நிறம் உள்ளவை; ஆதலால், இலைகளுக்கு இடையில் பச்சைக் கிளி இருந்தால், அது நம் கண்களுக்குத் தெளிவாகத் தெரியாது. கிளி பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அது நயமாகப் பேசும். நாம் சொல்லிக் கொடுக்கும் சொற்களைக் கற்றுச் சொல்லும். அதனால் மனிதர்கள் கிளியைப் பிடித்துக் கூண்டில் அடைத்து வளர்ப்பது உண்டு; பேசவும் கற்றுக் கொடுக்கிறார்கள். இதனால் 'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை' என்ற பழமொழி வழங்கி வருகிறது.

4. கிளியின் அலகு சிவப்பு நிறம். கழுத்தைச் சுற்றிலும் ஒரு சிவப்புக் கோடு இருக்கும் கிளி **பச்சைக் கிளி** எனப்படும். பச்சை நிறமுள்ள கிளிகளே அதிகமாகக் காணப்படினும், வெண்மையான கிளிகளும், மஞ்சள் நிறக் கிளிகளும் சிலவிடங்களில் உண்டு. பல நிறங்களை உடைய கிளிகளும் உண்டு; அவைகளைப் **பஞ்சவண்ணக் கிளிகள்** என்பார்கள்.

5. கிளி பழங்களைத் தின்னும். அதன் அலகு மிகவும் உறுதியானது. அதனால் அது பழத்திலுள்ள கொட்டைகளையும் உடைத்துத் தின்னும். கிளி பால் குடிக்கும். கிளிகளைக் கோவில்களில் வளர்ப்பதுண்டு.

6. பறவைகள் சுதந்திரமாக வாழ்வதில் விருப்பம் உள்ளவை. அவைகளைக் கூண்டுகளில் அடைத்து வருத்தக்கூடாது. கிளியைக் கூண்டில் அடைத்து வைத்து வளர்ப்பது பாவம்; அதைச் சுதந்திரமாக வாழ விட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| அடைகாத்தல் | தன்மை | பொந்து | புதர் |
| பசுமை | இடையில் | தெளிவு | இனிமை |
| கூண்டு | வழங்கி | அலகு | பாவம் |
| கோபுரம் | மாடம் | அடைத்து | |

## அருஞ்சொற்பொருள்

தன்மை - குணம். இடையில் - நடுவில். வண்ணம்- நிறம். உறுதி - கெட்டி (வன்மை). பாவம்- தீய செயல். சுதந்திரம் - தன் விருப்பம்.

## கேள்விகள்

1. பறவைகளின் தன்மைகள் என்ன ?
2. பறவைகள் எங்கெங்கே வாழும்?
3. 'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை' என்ற பழமொழி ஏன் வழங்கி வருகிறது ?

4. கிளிகளின் கழுத்தில் இருப்பது என்ன ?

5. கிளியின் அலகு எப்படிப்பட்டது ?

6. கிளிகளை ஏன் கூண்டில் அடைத்து வளர்க்கக் கூடாது ?

## இலக்கணம்

1. **கந்தன், முருகன், கிளி, நாய், பொன், கல், மண்—** இவை பொருள்களின் பெயர்கள்.

**வீடு, பள்ளிக்கூடம், கோவில்**-இடங்களின் பெயர்கள்.

**மாதம், வருஷம், நாள்**-காலத்தின் பெயர்கள்.

**புங்கனூர், கோட்டையூர்**-ஊர்களின் பெயர்கள்.

**வேப்பமரம், மாமரம்**-மரங்களின் பெயர்கள்.

பொருள், இடம், காலம் முதலியவற்றைக் குறிக்கும் சொற்கள் **பெயர்ச்சொற்கள்** எனப்படும்.

2. கிளி **பேசுகிறது,** குயில் **பாடுகிறது,** கோழி **கூவுகிறது-** இந்த வாக்கியங்களைக் கவனி. கிளி பேசுகிறது என்பதில், **பேசுகிறது** என்ற சொல் கிளி செய்யும் வேலையைக் குறிக்கிறது. ஆகையால், பேசுகிறது என்பது வேலையைக் குறிப்பிடும் சொல் (வேலை = வினை) ; அது **வினைச்சொல்** எனப்படும். **கூவுகிறது, பாடுகிறது** என்ற சொற்களும் வினைச்சொற்களே.

## பயிற்சி

1. எதிர்ச் சொற்களை எழுது:

பானம், தெளிவு, தின்னும், சுதந்திரம், இனிமை, உண்டு, வாழும்.

2. பின் வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது: தன்மை, இனிமை, உறுதி, சுதந்திரம், விருப்பம்.

3. கோடிட்ட இடங்களில் எழுத்துக்களை அமைக்கவும்: கிளி ப—ங்களைத் தின்—ம்; கி—யின் அ—கு சிவப்பு நி—ம்; சொன்ன—ச்—ல்லும் கிளிப்பிள்—; கிளி அ—காக இருக்கும்.

4. நெல், பழம், தண்ணீர், அரிசி, பறவை, குயில்—இவை என்ன பெயர்கள்?

5. கீழ் வரும் சொற்களுக்கு அதே பொருள் உள்ள வேறு சொற்களை எழுது:

நிறம், போல, திருப்பி, இடையில், உறுதி.

6. வாய்க்குள் படித்துச் சரியா, தவறு என்று சொல்லு: (1) கிளி பேசுகிறது. (2) கிளி புதர்களில் வாழும். (3) கிளியின் அலகு பச்சை நிறம். (4) கிளியைக் கூண்டில் அடைக்கக் கூடாது. (5) சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.





## 9. வண்ணப் பசுங்கிளி

1. வட்டமாய் உன் கழுத்தில்—ஒரு நாளும்
வாடாத ஆரமதை
இட்டவர் ஆரடியோ ?—எனக்கும்
இயம்புவையோ ? கிளியே !

2. சாய்ந்து தலைவணங்கி—இனிய
தமிழைநீ கற்குமுறை,
ஆய்ந்த புலவருமே—எழுதி
அயர்ந்துகை சோர்வார், அம்மா !

3. ஒற்றை யொருகாலில்—நின்றுகனி
உண்ணும் அரிய வித்தை
கற்றது யாவரிடம்?—அவரை நீ
காட்டுவையோ, கிளியே !

4. கண்ணுக் கினிமையாகி—எனதிரு
காதும் குளிரச் செய்யும்
வண்ணப் பசுங்கிளியே !-குயிலும் உன்
மாதவம் செய்ததுண்டோ ?

5. பாலுக்குச் சீனியைப் போல்-பசுந்தமிழ்ப்
பாடலுக் கின்னிசைபோல்
சோலைக்குப் பைங்கிளியே!—உனது
துணையும் இனிதே அம்மா!

—தேவி

| | | |
|---|---|---|
| வாடாத | ஆரம் | இட்டவர் |
| இயம்பு | சாய்ந்து | ஆய்ந்த |
| புலவர் | அயர்ந்து | சோர்வார் |
| ஒற்றை | அரிய | வித்தை |
| வண்ணம் | மாதவம் | சீனி |
| பசுந்தமிழ் | இன்னிசை | பைங்கிளி |
| துணை | சோலை | |

### அருஞ்சொற்பொருள்

ஆரம்-மாலை. இயம்பு-சொல். ஆய்ந்த-ஆராய்ந்த.

### கேள்விகள்

1. கிளி தமிழை எவ்வாறு கற்கிறது ?
2. கிளி பழத்தை எவ்வாறு உண்கிறது ?
3. சோலைக்குக் கிளி எதைப்போல் உள்ளது?

### பயிற்சி

1. ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும் எழுது :

நிறங்கள், சோலை, பாடல், நாட்கள், வட்டம், கனிகள்.

2. கீழ் உள்ளவற்றைச் சொற்களாக அமைக்கவும்:

ரம்தசுந்தி, சஞ்வணர்ம்ப, ருபப்விம்.

3. கழுத்து, நாள், பார், புலவர், வித்தை, காட்டு, செய்தது, அயர்ந்து — இவற்றுள் பெயர்ச் சொல், வினைச்சொல் பிரித்துக் காட்டு.

4. எதிர்ச்சொற்களை எழுது:

இட்டவர், வாடாத, குளிர்ச்சி, சாய்ந்து, பாடல்.

5. சொற்களைப் பொருத்திப் படி :

| | |
|---|---|
| கிளி | கரைகிறது |
| குயில் | நீந்துகிறது |
| காகம் | தத்துகிறது |
| தவளை | பேசுகிறது |
| மீன் | பாடுகிறது |

## தெரிந்துகொள்

1. **தலை**, தழை; பழம், பலம்; **வேலை**, வேளை; காலை, காளை; — **ல, ழ, ள** என்ற எழுத்துக்களின் உச்சரிப்பைக் கவனி.

2. மனம், மணம்; அணு, நுணு; யானை, **கன்று**, விருந்து, பந்து—இவற்றிலிருந்து **ன, ண, ந** என்ற எழுத்து ஒலிகளை நன்றாகத் தெரிந்து கொள்.

# 10. என் கதை



1. என் பிறப்பு அதிசயமானது. என் பிறப்பைப் பற்றி என் தாயார் எனக்குச் சொல்லியதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

2. நான் முட்டையிலிருந்து தோன்றினேன். என் இனத்தார் தண்ணீரில் முட்டை இடுவார்கள். முட்டையாக இருந்தபொழுது நான் ஜவ்வு போன்ற ஒருவகைப் பொருளுடன் கூடி இருந்தேன்; தண்ணீரில் மிதந்துகொண்டிருந்தேன். சூரிய வெப்பத்தால் முட்டை வெடித்துக் குஞ்சாகத் தோன்றினேன். உடனே என் அருகில் நீரில் இருந்த செடி கொடிகளைப் பற்றிக்கொண்டேன். அப்பொழுது எனக்கு ஒரு பெரிய தலையும், ஒரு குறுகிய வாலும் இருந்தன. பார்வைக்கு நான் ஒரு மீனைப் போலவே இருந்தேன்; தண்ணீரில் கவலையில்லாமல் உலவி விளையா

டிக்கொண்டிருந்தேன். நீர்ப்பாசிகளைத் தின்று வாழ்ந்தேன். என் தாயார் என்னைக் கவனிப்பதே யில்லை.

3. கொஞ்ச காலத்திற்குப் பின்பு எனக்கு இரண்டு பின்னங்கால்கள் தோன்றின. அவை நாளடைவில் நீண்டு வளர்ந்தன. பின்பு, முன்னங்கால்கள் இரண்டும் தோன்றின. அப்பொழுது வால் உள்ள தவளையானேன்.

4. இந்த உருவத்தில் தண்ணீரில் உள்ள புழுப்பூச்சிகளைத் தின்றேன். முன்பு நீருக்குள் மூச்சு விடுவதற்குச் **செவுள்கள்** இருந்தன. அவை இப்பொழுது மறைந்தன. தண்ணீரின் மேலே வந்து மூச்சு விடுவேன். தரைக்குத் தாவிச் சென்று பூச்சிகளைப் பிடித்துத் தின்று வந்தேன். எனது நாக்கில் ஒரு பிளவு தோன்றிற்று; பூச்சிகளைத் தின்ன ஆவல் உண்டாயிற்று. சிறிது காலத்தில் என்னுடைய வால் முழுதும் மறைந்து, இவ்வுருவத்தை அடைந்தேன். நான் முட்டையிலிருந்து தோன்றித் தவளையின் உருவத்தைப் பெறுவதற்குச் சுமார் மூன்று மாதங்கள் ஆயின என்று என் தாயார் சொன்னார்.

5. என் பின்னங்கால்கள் நீளமானவை; முன்னங்கால்கள் குட்டையானவை. ஆதலால்

நான் சுலபமாகத் தாவிச் சென்று, பூச்சிகளைப் பிடித்துத் தின்பேன். என் நிறம் சேற்றைப் போலவே இருக்கும். சேற்றுடன் நான் வாழ்வேன்; அதுவே என் வீடு. நான் தண்ணீரிலும் வாழ்வேன்; தரையிலும் இருப்பேன். என்னை எளிதில் பார்க்க முடியாது. அடிக்கடி நான் கத்துவேன்; அப்பொழுது நான் இருக்கும் இடம் தெரிந்துவிடும்.

6. எனக்குப் பகை பாம்பு. என்னை அதுபற்றி விழுங்கிவிடும்.

| | | |
|---|---|---|
| பிறப்பு | அதிசயம் | இடுதல் |
| முட்டை | ஐவ்வு | பற்றி |
| கவலை | ஆனந்தம் | மாறினேன் |
| உருவம் | பாசி | செவுள்கள் |
| பிளவு | ஆவல் | ஆயின |
| நீளம் | குட்டை | சுலபம் |
| சேறு | எளிதில் | பகை |

### அருஞ்சொற் பொருள்

அதிசயம்-புதுமை. ஆனந்தம்—மகிழ்ச்சி. ஆவல்-ஆசை.

### கேள்விகள்

1. தவளைக்குஞ்சு தண்ணீரில் எந்த உருவத்தில் மிதக்கும்?
2. தண்ணீரில் நீந்தும்பொழுது தவளைக் குஞ்சின் உருவம் எவ்வாறு இருந்தது?
3. வால் உள்ள தவளையின் கால் அமைப்பு கூறு.

4. தவளையின் முழு உருவத்தை விளக்கு.

5. தவளை எதனால் சுலபமாகத் தாவும் ?

6. தவளையை ஏன் எளிதில் காண முடியாது'

7. தவளைக்குப் பகை எது ?

## இலக்கணம்

**அம்மா** என்பது ஒரு சொல். இச்சொல்லில் மூன்று எழுத்துக்கள் உள்ளன. இம்மூன்று எழுத்துக்களும் வெவ்வேறு இனம்.

**அ** என்பது **உயிர் இனம்** எனப்படும். அவ்வினத்தைச் சேர்ந்தவை பன்னிரண்டு எழுத்துக்கள். அவை **அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ. ஒ, ஓ, ஔ.**

**ம்** என்பது **மெய் இனம்**. இவ்வினத்தைச் சேர்ந்தவை பதினெட்டு எழுத்துக்கள். அவை **க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.**

**மா** என்பது **உயிர்மெய் இனம்.** உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுடன் சேர்ந்து ($18 \times 12 = 216$) **உயிர்மெய் எழுத்துக்கள்** தோன்றுகின்றன.

க் + அ = க, க் + ஆ = கா, க் + இ = கி, க் + ஈ = கீ. க் + உ = கு, க் + ஊ = கூ, க் + எ = கே, க் + ஐ = கை, க் + ஒ = கொ, க் + ஓ = கோ, க் + ஔ = கௌ — க் என்னும் ஒரு மெய்யுடன் பன்னிரண்டு உயிர்கள் கூடி இவ்வரிசை 12 எழுத்துக்களும் தோன்றின. இப்படியே எல்லா மெய்யுடனும் எல்லா உயிரும் கூடுவதனால் தோன்றும் எழுத்துக்களே **உயிர்மெய் இனம்.** தமிழ் எழுத்தின் வகை **உயிர், மெய், உயிர் மெய்** என மூன்று.

## பயிற்சி

1. எதிர்ச் சொற்களை எழுது:

பிறப்பு, வெப்பம், அருகில், பெரிய, கவலை, தோன்றினேன், மேலே, எளிது, குறைவு.

2. பின் வருவனவற்றைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:

அதிசயம், பிளவு, எளிது, பகை, அடிக்கடி.

3. எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுது:

என் பிரப்பு அதிசயமானது. எண் பெயற் தவலை. நான் சேர்றில் வாள்வேன். முண்ணங் காள்கல் முழைத்ததும் என் வாள் மரைந்தது.

4. **என் தாயார் என்னை கவனிக்கவில்லை** - இந்த வாக்கியத்தில் உள்ள எழுத்துக்களைக் கீழ்க் காணும் அட்டவணையில் வகைப்படுத்தி எழுது:

| உயிர் எழுத்து | மெய் எழுத்து | உயிர் மெய் எழுத்து |
|---|---|---|
| | | |

# 11. மாலை நேரம்



1. மாலையில் வானத்தைப் பார், மேற்கே சூரியன் மறைவதைப் பார். அந்தக் காட்சி எவ்வளவு அழகாக இருக்கிறது! வானத்தில் சிவப்பு நிறம் படர்ந்திருப்பதைப் பார்! அப்போது வெப்பம் குறைந்திருக்கிறது; குளிர்ந்த காற்று வீசுகிறது; பூக்கள் மலர்ந்து நறு மணம் வீசுகின்றன; இருள் வரப்போகிறது.

2. மாலைவேளையில் பறவைகள் கூட்டங் கூட்டமாகத் தத்தம் கூடுகளை நோக்கிப் பறந்து செல்கின்றன; மயில்கள் ஆடு கின்றன; வெளியே மேயச் சென்ற பசுக் கூட்டங்கள் திரும்பி வருகின்றன; மக்கள் சிலர் நண்பர்களுடன் உலாவிக்கொண்டிருக் கிறார்கள்.

3. மைதானங்களில் சிறுவர் சிறுமிகள் மாலையில் விளையாடுகிறார்கள். மாலை வேளையே விளையாடுவதற்கு ஏற்ற நேரம். மாலை வேளை

யில் விளையாட்டு மனோகரமாயிருக்கும். உடல் ஆரோக்கியமடையும்; மனத்திற்குக் கிளர்ச்சி உண்டாகும்.

4. பகல் முழுதும் வேலை செய்வதால் உடல் களைப்பு அடையும். அக்களைப்பைப் போக்க நாம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். ஓய்வு நேரங்களில் விளையாடுவதால், களைப்படைந்த உறுப்புக்களுக்கு உற்சாகம் உண்டாகும்.

5. மாலை நேரத்தில் சிறுவர்களும் சிறுமிகளும் பலவகை விளையாட்டுக்களை விளையாடுவார்கள். தாண்டுதல், குதித்தல், கண்களைப் பொத்துதல், சடுகுடு, கிளித்தட்டு, கைப்பந்து, சறுக்கு ஆட்டம், ஊஞ்சல், கோலாட்டம், கும்மி முதலியவை விளையாட்டு வகைகள். சிறுமிகள் கும்மி அடிக்கும்பொழுதும், கோலாட்டம் அடிக்கும்பொழுதும் பாட்டுக்கள் பாடுவார்கள்.

6. விளையாடும்பொழுது உடலிலிருந்து வியர்வை நீர் வெளிவருகிறது; அதனால் இரத்தம் சுத்தம் அடைகிறது. இரத்த ஓட்டம் அதிகமாகித் தசைகள் வலிவு அடைகின்றன. ஆதலால், மாலையில் விளையாடுவது மிக நல்லது.

7. மாலை கழியும்போது இருள் சூழ்கிறது. சாலைகளிலும் வீட்டு வாசல்களிலும் விளக்குகள் எரிகின்றன. உலவச் சென்ற பெரியவர்களும், சிறுவர்களும், சிறுமிகளும், குழந்தைகளும் தத்தம் வீடுகளுக்குத் திரும்புகிறார்கள். நேரம் ஆக ஆக ஊரில் ஒலி அடங்குகிறது. பகல் வேளை கழிந்து, இரவு வருகின்றது.

| | | |
|---|---|---|
| காட்சி | எவ்வளவு | தென்றல் |
| நறுமணம் | இருள் | தத்தம் |
| நோக்கி | கரைதல் | உலாவுதல் |
| ஏற்ற | மனோகரம் | ஆரோக்கியம் |
| உற்சாகம் | களைப்பு | ஓய்வு |
| உறுப்பு | வியர்வை | தசைகள் |
| வலிவு | சூழ்கிறது | ஒலி |

## அருஞ் சொற்பொருள்

தென்றல்-தெற்குத் திசையிலிருந்து வீசும் காற்று. நறுமணம் - நல்ல வாசனை. தத்தம் - தங்கள் தங்களுடைய. ஏற்ற - தகுந்த. மனோகரமான - மனதிற்கிசைந்த. ஒலி - சத்தம்.

## கேள்விகள்

1. மாலையில் வானம் எப்படிக் காணப்படும்?
2. மாலையில் நாம் காணும் காட்சிகள் யாவை?
3. விளையாடுவதற்கு ஏற்ற நேரம் எது? ஏன்?

4. மாலையில் குழந்தைகள் விளையாடும் விளையாட்டுகள் எவை?
5. விளையாடுவதால் உண்டாகும் நன்மைகள் யாவை?
6. இருள் சூழ்ந்ததும் ஊர் எவ்வாறு காணப்படும்?

## இலக்கணம்

**பகல் முழுதும் வேலை செய்தால் உடல் களைப்பு அடையும்.**—இது ஒரு வாக்கியம். இதிலுள்ள சொற்களை இடம் மாற்றிப் படி: உடல் அடையும் களைப்பு முழுதும் வேலை பகல் செய்தால் - இதன் கருத்து விளங்குகிறதா? இல்லை. ஆகையால், ஒரு வாக்கியத்தில் உள்ள சொற்கள் கருத்து விளங்கக்கூடிய வரிசையில் அமைந்திருக்கவேண்டும்.

## பயிற்சி

1. எதிர்ச் சொற்களை எழுது :

   மாலை, மலர்ந்து, இருள், நண்பன், பகல், ஓய்வு சுத்தம்.

2. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:

   கூட்டங் கூட்டமாக, காட்சி, ஆரோக்கியம், உற்சாகம், ஒலி.

3. **பசு** தன்னுடைய கதையைச் சொல்லுவது போல் ஐந்து வாக்கியங்கள் எழுது.
4. பின் வருவனவற்றில் இனம் சேராத சொல்லை எடுத்து எழுது :

நெல், சோளம், கம்பு, உருளைக்கிழங்கு, கோதுமை; வாழைப்பழம், பலாக்காய், மாம்பழம், மாதுளம்பழம்; கற்பலகை, கரும்பலகை, கண்ணுடி, காகிதம்; குயில், தவளை, மயில்.

5. பின்வரும் சொற்ருெடர்களை வரிசைப்படுத்தி வாக்கியங்களாக அமைக்கவும்:

சிறுமிகள் சிறுவர் விளையாடுகிருர்கள் மைதானத்தில் காற்று தென்றல் குளிர்ந்து வீசுகிறது

6. கீழுள்ள வாக்கியங்களில் வினைச் சொற்களை எடுத்து எழுது:

தென்றல் வீசுகிறது. சிறுவர்கள் விளையாடுகிருர்கள். விளக்கு எரிகிறது. சிறுமிகள் கும்மி அடிக்கிருர்கள்.

---

## 12. துப்புரவு

1. **'சுத்தம் சுகம் தரும்'**. நாம் சுகமாக வாழவேண்டுமானுல் சுத்தமாக இருக்கவேண்டும். உடல் சுத்தம் மட்டும் போதாது; உள்ளமும் சுத்தமாக இருக்கவேண்டும்; நம் வீட்டின் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். உடல் சுத்தத்தை முதலில் கவனிப்போம்.

2. நாம் ஒவ்வொருவரும் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும்; மல ஜலம் கழித்துப்

பல் துலக்க வேண்டும். பல்குச்சியால் பல் துலக்குவது நல்ல பழக்கம். பல் குச்சியின் ஓர் முனையை நன்ருகக் கடித்து மிருதுவாக்கிக் கொள்ள வேண்டும். பின்பு அதனுல் பற்களை உள்ளும் புறமும் தேய்க்க வேண்டும். அப்பொழுது வாயில் ஊறும் எச்சிலை விழுங்கக் கூடாது; வெளியே துப்பிவிட வேண்டும்.



3. பின்பு பல் குச்சியைக்கிழித்து, ஒரு பாதிக் குச்சியால் நாக்கைச் சுத்தம் செய்ய வேண்டும். தண்ணீரால் வாயை நன்ருகக் கொப்புளித்துக் கழுவ வேண்டும். முகம், கைகள், மார்பு, கால்கள் ஆகியவைகளைத் தேய்த்துக் கழுவ வேண்டும்; கால்களை முழங்கால் வரையிலும் தேய்த்துக் கழுவவேண்டும். மல சுத்தி செய்து கொண்டபின்பும் கை கால்களை நன்ருகக் கழுவிக் கொள்ளவேண்டும்



4. பல் விளக்கிய பின்பு ஒரு தனி இடத்தில் இருந்து கடவுளை வணங்க வேண்டும். நாம் தினமும் உடலை நன்ருகத்

தேய்த்து நீராட வேண்டும். குளிர்ந்த நீரில் குளித்தல் நன்று. நன்றாகத் துவைத்து உலர்ந்த ஆடைகளையே உடுத்த வேண்டும். நமது ஆடைகளை நாமே துவைத்துக் கட்டுவது நல்லது.

4. நாம் வசிக்கும் வீட்டையும் அதன் சுற்றுப் புறத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று சொன்னோமல்லவா! குப்பைக் கூளங்களைத் தனியாகச் சேர்த்து ஒதுக்கத்தில் கொட்டி வைக்க வேண்டும்; கண்ட இடங்களில் எச்சில் துப்பக் கூடாது: கண்ட கண்ட இடங்களில் அசுத்தம் செய்யக் கூடாது.

5. நமது வீட்டுக்கு அருகில் தண்ணீர் தேங்கவிடக் கூடாது. தண்ணீர் தேங்கினால் ஈக்களும் கொசுக்களும் பெருகி, வியாதிகள் பரவும்.

6. நமது கை கால்களில் உள்ள நகக் கண்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். வளரும் நகங்களை அடிக்கடி நறுக்கிக் கொள்ள வேண்டும்.

7. ‘துப்புரவு’ என்றால் ‘சுத்தம்’ என்பது பொருள். நோயில்லாமல் இருக்க வேண்டுமானால் சுத்தமாக இருக்க வேண்டும். **“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.”**

| | | |
|---|---|---|
| சுற்றுப்புறம் | செயல் | எண்ணம் |
| கவனி | முனே | மிருது |
| ஊறும் | எச்சில் | துப்புதல் |
| கிழித்து | கொப்புளித்தல் | மலம் |
| நீராடல் | அசுத்தம் | வியாதி |
| நகக்கண் | நறுக்கி | துப்புரவு |

## அருஞ்சொற்பொருள்

புறம் - வெளிப்பக்கம். நீராடல் - குளித்தல். நறுக்கி - வெட்டி.

## கேள்விகள்

1. நாம் சுகமாக வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும் ?
2. நாம் எவ்வாறு பல் துலக்க வேண்டும் ?
3. நமது ஆடைகள் எவ்வாறு இருக்கவேண்டும்?
4. நம் வீட்டையும் சுற்றுப்புறத்தையும் எவ்வாறு வைத்திருக்க வேண்டும் ?
5. வீட்டுக்கு அருகில் ஏன் தண்ணீர் தேங்கக் கூடாது ?
6. நோயில்லாமல் வாழ்வது எப்படி ?

## பயிற்சி

1. பொருள் கூறுக :

   செயல், மிருது, நீராடல், வியாதி, முனே.
2. எதிர்ச் சொற்களை எழுது :

   சுகம், சுத்தம், உள்ளம், மிருது, உலர்ந்த, வீடு, சேர்த்து, வாழ்வு.
3. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது :

சுற்றுப்புறம், எண்ணம், உள்ளும் புறமும், நீராடல், குப்பைக் கூளம்.

4. சுத்தத்தைப் பற்றி மூன்று பழமொழிகள் எழுது.

5. பின்வரும் வாக்கியங்கள் **சரியா, தவரு** என்று சொல். தவருனல்இக்குறி (×)யை வாக்கியத்திற்கு நேராக இடு; சரியானல் இக்குறி (✓) யை இடு.

(1) தினந்தோறும் அதிகாலையில் நீராடு.

(2) செங்கற் பொடியால் பல் தேய்ப்பது நல்லது.

(3) நகக் கண்களைச் சுத்தமாக வைத்துக் கொள்.

(4) கண்ட கண்ட இடங்களில் எச்சில் துப்பு.

(5) உன் ஆடைகளை நீயே துவைத்துக் கொள்.

6. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்கவும்:

(1) வீட்டையும் சுற்றுப் புறத்தையும் ———வைத்துக்கொள்.
(சுத்தமாக, நன்ருக, அழகாக)

(2) பற்களை ——— தேய்க்க வேண்டும்.
(உள்ளும் புறமும், மேலும் கீழும்)

(3) நாவை வழித்துச் சுத்தம்—(செய், செய்யாதே)

(4) நாம் —— யில் எழுந்திருக்க வேண்டும்
(மாலை, அதிகாலை, நடுப்பகல்)

(5) உன் ஆடைகளை நீயே துவைக்க—
(பழகு, வேண்டும்)

## 13. உடற் பயிற்சி



தேகப் பயிற்சி செய்வோம்—வரிசையாய்ச்
சேர்ந்து நிமிர்ந்து நிற்போம்;
வேகமாய்க் கால்வீசி—நடப்போம்
வேங்கை போல் பாய்ந்திடுவோம். 1

சோம்பலை வெட்டி எறி—இடுப்பைத்
தோகை மயில்போல் வளை;
'ஓம்' என்றுயிர்த்து விடு—மார்புவிரிந்து
உரம்பெற்று ஓங்கிடவே! 2

கையை மடக்கிடுவோம்-முன்னும்பின்னும்
கையைச் சுழற்றிடுவோம்;
பைய உட்கார்ந்து எழுவோம்-பஸ்கிசெய்து
பாதத் தசை வளர்ப்போம். 3

வேர்த்துச் சதைபுரளக்—கசரத்து
வேண்டுமட்டும் செய்வோம்:
சேர்த்துக் கரங்கள் எல்லாம்-வட்டமாய்ச்
சேர்ந்து நடம் இடுவோம்! 4

—யோகி சுத்தானந்த பாரதியார்

| | | | |
|---|---|---|---|
| பயிற்சி | நிமிர்ந்து | வேங்கை | உயிர்த்து |
| உரம் | ஓங்கு | பைய | பஸ்கி |
| புரள | கசரத்து | கரம் | நடம் |

### அருஞ்சொற்பொருள்

உயிர்த்து - மூச்சு விட்டு. உரம் - பலம். பைய - மெல்ல. கசரத்து - உடற்பயிற்சி. கரம் - கை. நடம் - நடனம்.

### கேள்விகள்

1. எந்த எந்த வகைகளில் உடற்பயிற்சி செய்யலாம்?
2. சுவாசப் பயிற்சியால் என்ன பயன்?
3. பாதத் தசையை வளர்ப்பது எப்படி?
4. கசரத்து செய்வதால் என்ன பயன்?

---

## 14. சுட்டபழமும் சுடாதபழமும்

1. தமிழ் நாட்டில் முன்காலத்தில் கல்வியில் சிறந்த பெண்மணிகள் பலர் இருந்தனர். அவர்களுள் **ஔவையார்** மிகச் சிறந்த தமிழ்ப் புலவர். ஔவையார் அருளிச் செய்த நூல்கள் பல. கவிகள் பாடுவதில் அவர் வல்லவர். **ஆத்திசூடி, கொன்றைவேந்தன்** சிறுவர் சிறுமியர்க்கென அவர் இயற்றிய நீதி நூல்கள்.

2. ஔவையார் பொதுவாக மக்களிடம் அன்புள்ளவர்; அதிலும் ஏழைகளிடம் பேரன்பு உடையவர். அவர் ஊர் ஊராகச் சென்று சுவை மிகுந்த பாடல்களைப் பாடுவார்; மக்கள் மதித்துக் கொடுக்கும் பரிசுகளை

விரும்பி ஏற்றுக்கொள்வார். பசி வேளைக்குக் கூழ் கிடைத்தாலும், அதைப் பருகி மகிழ்ச்சி அடைவார். மக்கள் அவரது கல்வித் திறமையைப் பாராட்டிப் போற்றி வந்தனர். ஔவையாரும் தமது கல்வித் திறமையைப் பற்றிப் பெருமை கொண்டிருந்தார்.



3. ஒரு நாள், நடுப் பகலில், ஒரு காட்டின் வழியாக ஔவையார் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது வெயில் கடுமையாக இருந்தது; பசியும் தாகமும் அவரை வருத்தின; அருகில் ஊர் ஒன்றும் காணப்படவில்லை; தாகத்தைத் தணித்துக் கொள்ளவும் வசதி இல்லை; தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தார். அப்போது சற்றுத் தொலைவில் அவர் சில நாவல் மரங்களைக் கண்டார். ஒரு மரத்தின்மேல் ஓர் இடைப்பையன் ஏறி, நாவல் பழங்களைத் தின்றுகொண்டிருந்ததைக் கண்டார். அருகில் சில மாடுகள்



மேய்ந்து கொண்டிருந்தன. ஔவையார் அந்த மரத்தின் அடியில் வந்து நின்று, நிமிர்ந்து பையனைப் பார்த்தார்.

4. "பாட்டீ, என்ன வேண்டும்?" என்று இடைப் பையன் ஔவையாரைக் கேட்டான். "தம்பீ, பசியால் மிகவும் வருந்துகிறேன்; தாகத்தால் நாக்கு வறண்டிருக்கிறது. எனக்குச் சில நாவல் பழங்களைப் பறித்துப் போடு" என்று ஔவையார் வேண்டிக்கொண்டார். "பாட்டீ, உங்களுக்குச் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று பையன் கேட்டான்.

5. ஔவையாருக்கு அந்தக் கேள்வியின் கருத்து விளங்கவில்லை. சுட்ட பழம் என்பது என்ன? சுடாத பழம் என்பது என்ன? சற்று நேரம் யோசித்தார். பின்பு, இடைப் பையனைப் பார்த்து, "தம்பீ, சில சுட்ட பழங்களைப் பறித்துப் போடு" என்று கேட்டுக்கொண்டார். சிறுவனும் நன்றாகப் பழுத்த சில நாவல் பழங்களைப் பறித்து எறிந்தான். அவை கீழே இருந்த மணலில் விழுந்தன. ஔவையார் அவற்றைக் கையில் எடுத்தார்; அவற்றில் மணல் படிந்திருந்தது. மணலை அகற்றுவதற்காக ஔவையார் அப்பழத்தை ஊதினார்.

6. "பாட்டி! பழம் மிகவும் சூடாக இருக்கிறதா? நன்றாக ஊதிச் சாப்பிடுங்கள். ஊதாமல் அருந்தினால் வாய் சுடும்" என்று சொல்லிச் சிரித்தான் இடைச் சிறுவன். அச் சொற்களைக் கேட்ட ஔவையார் வெட்கம் அடைந்தார். "எல்லாம் கற்றுவிட்டேன் என்று கர்வம் கொண்டிருந்தேனே! இந்தச் சிறுவன் என்னை ஏமாற்றிவிட்டானே!" என்று கருதினார்; நிமிர்ந்து பார்த்தார். இடைப் பையனையும் பசுக்களையும் காண வில்லை. முருகப் பெருமான் அவர் முன்னே காட்சி அளித்தார். ஔவையார் அவரை வணங்கி, சில பாடல்களைப் பாடினார். அன்று முதல் ஔவையார் செருக்கை விட்டு ஒழித்தார்.

| | | |
|---|---|---|
| கல்வி | பெண்மணி | அருளி |
| கவி | வல்லவர் | இயற்றிய |
| மிகுந்த | பரிசு | ஏற்று |
| பருகி | பாராட்டி | பெருமை |
| நடுப்பகல் | கடுமை | வருத்தின |
| தணித்து | தள்ளாடி | சுற்றுமுற்றும் |
| வறண்டு | வேண்டுதல் | சுட்ட |
| சுடாத | விளங்கவில்லை | அண்ணாந்து |
| படிந்து | அருந்து | வெட்கம் |
| கர்வம் | பெருமான் | செருக்கு |

## அருஞ்சொற்பொருள்

தணித்து - குறைத்து. அண்ணாந்து - மேலே பார்த்து. அருந்து - சாப்பிடு. செருக்கு - தன் மதிப்பு.

## கேள்விகள்

1. ஔவையார் அருளிச் செய்த நூல்கள் எவை?
2. ஔவயார் எப்படிப்பட்ட குணம் உடையவர்?
3. ஔவையாருக்கு எதனால் களைப்பு நேர்ந்தது?
4. களைத்த ஔவையார் எந்த இடத்தை அடைந்தார்?
5. ஔவையார் இடைப் பையனிடத்தில் என்ன கேட்டார்?
6. ஔவையார் ஏன் பழத்தை ஊதினார்?
7. ஔவையார் முடிவில் கண்ட காட்சி யாது?

## தெரிந்துகொள்

ஆடுமாடு மேய்ப்பவன் **இடையன்.**

வேட்டை ஆடுகிறவன் **வேடன்.**

மீன் பிடிப்பவன் **வலைஞன்.**

வீடு கட்டுகிறவன் **கொத்தன்.**

## இலக்கணம்

வினைச் சொற்களுக்கும் **ஒருமை, பன்மை** உண்டு. (உ-ம்) ஆடு மேய்கிறது - ஒருமை வாக்கியம். ஆடுகள் மேய்கின்றன - பன்மை வாக்கியம்.

## பயிற்சி

1. முன்காலம், ஏழை, அன்பு, விரும்பு, வெயில், சுட்ட-இவற்றிற்கு எதிர்ச் சொற்களை எழுது.

2. தள்ளாடித் தள்ளாடி, ஊர் ஊராக, சுற்று முற்றும், செருக்கு, அருந்து – இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. இந்தக் கதையை உன் வகுப்பில் உள்ள பிள்ளைகளுடன் நடித்துக் காட்டு.

4. பழங்கள், பையன்கள், மாடு, மக்கள், பாடல்கள் - இவற்றில் ஒருமை, பன்மை பிரித்துக் கூறுக.

5. பின்வரும் வாக்கியங்களைப் பன்மை வாக்கியங் களாக மாற்றி எழுது :

1. இடையன் மாடு மேய்ப்பான்.
2. பழம் மணலில் விழுந்தது.
3. காட்டில் நாவல் மரம் காணப்பட்டது.
4. ஔவை பழத்தை ஊதினர்.

---

## 15. பனி நில மக்கள்

1. பாரத நாட்டுக்கு வடக்கே, பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால், பரந்த **பனி நிலம்** ஒன்று இருக்கிறது. அந்நில நாடு குளிர் மிகுந்தது. ஒரு வருஷத்தில் ஆறு மாதங்கள் நிலம் பனிக் கட்டியால் மூடப்பட்டிருக்கும்; மற்ற ஆறு மாதங்கள் பனி உருகி வேனிற் காலம்போல் இருக்கும். குளிர் நாட்களில் அங்குள்ளவர்கள் சூரியனைக் காணமுடியாது.

2. அங்குள்ளவர்களுடைய நிறம் மஞ்சள்; குள்ளமாக இருப்பார்கள். அவர்கள் வருஷம் முழுதும் ஒரே இடத்தில் வசிக்கமாட்டார்கள். குளிர் காலத்தில் மேட்டு நிலங்களில் வசிப்பார்கள் பனிக் கட்டிகளால் வீடுகளை அமைத்துக் கொள்வார்கள். அவர்களுடைய வீடு ஒரு கிண்ணத்தைக் கவிழ்த்ததுபோல் இருக்கும். அதன் வாயில் மிகவும் சிறியதாக இருக்கும். மண்டியிட்டு ஊர்ந்து, அதன்



உள்ளே செல்ல வேண்டும். வீட்டினுள்ளே எப்பொழுதும் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருக்கும். அந்த வீடுகளுக்கு **இக்ளூ** என்பது பெயர்.

3. அங்குள்ள மக்கள், கோடை காலத்தில் தாழ்ந்த நிலங்களில் தோலாலான கூடா

ரங்களில் வசிப்பார்கள். அந்நாட்டில் மரம், செடிகள் வளரமாட்டா; ஒரு வகைப் பாசி தான் விளையும். ஆதலால், அந்நாட்டு மக்கள் மிருகங்களின் மாமிசத்தையும், மீனையும் தின்பார்கள். **ஸீல், வால்ரஸ்** என்னும் கடற் பிராணிகள் அங்கே அதிகம். அவற்றை வேட்டையாடுவதே அவர்களுடைய தொழில். அவற்றின் மாமிசம் உணவாகவும், தோல் உடையாகவும், கொழுப்பு விளக்கெரிக்கவும் உதவுகின்றன.

4. அவர்களுடைய வண்டிக்குச் சக்க ரங்கள் கிடையா. அவ்வண்டிக்கு **ஸ்லெட்ஜ்** என்பது பெயர். **சடை நாய்களும், ரெயின் டீர்** என்னும் மான்களும் அந்த வண்டியைப் பனித் தரையின் மேல் இழுத்துச் செல்லும்.

5. அந் நாட்டு ஆண்கள், மீன்களை ஈட்டியால் குத்தவும், மிருகங்களை வேட்டை யாடவும், படகு செலுத்தவும் கற்றுக்கொள் கிறார்கள். பெண்கள் சமையல் செய்யவும், தோல் உடைகள் தைக்கவும் கற்றுக் கொள் கிறார்கள். இக்காலத்தில் அவர்கள் கல்வியும் கற்று வருகிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| பல்லாயிரம் | அப்பால் | பரந்த | வேனில் |
| குள்ளம் | ஊர்ந்து | கோடை | கூடாரம் |
| பிராணி | வேட்டை | கொழுப்பு | செலுத்துதல் |
| படகு | சமையல் | ஈட்டி | |

## அருஞ்சொற்பொருள்

பல்லாயிரம் -பல ஆயிரம். பரந்த - விரிவான.

## கேள்விகள்

1. பனி நிலம் எப்படி இருக்கும் ?
2. அங்குள்ளவர்கள் வீடு எப்படி இருக்கும் ?
3. கோடையில் அவர்கள் எதில் வசிப்பார்கள் ?
4. பனி நில மக்களின் உணவுப் பொருள்கள் யாவை ?
5. ஸ்லெட்ஜ் என்பது என்ன ?
6. அந் நாட்டில் ஆண்களும் பெண்களும் செய்யும் வேலைகள் யாவை ?

## பயிற்சி

1 பின் வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது :
பல்லாயிரம், பரந்த, ஊர்ந்து, வேனிற்காலம், கொழுப்பு, வேட்டையாடினுன்.

2. எதிர்ச் சொற்களை எழுது :
குள்ளம், பரந்த, முடியாது, உட்புறம், எரிதல்.

3. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்கவும் :

பனி நிலத்தில் குளிர் நாட்களில்——— காணமுடியாது.
பனி நில மக்கள் வேனிற் காலத்தில் தோல்——— வசிப்பார்கள்.
கடற் பிராணியின் கொழுப்பு——— உதவும்.
பனி நிலத்தில் ஒரு வகைப்——— வளரும்.

## 16. பாரதியார்

1. **பாரதியார்** சிறந்த தமிழ்க் கவிஞர். பாரதியாரை அறியாதவர் தமிழ் நாட்டில் இருக்கமாட்டார்கள். அவருடைய பாடல் களை நீங்கள் படித்தும் பாடியும் பழகி இருப் பீர்கள். பல தமிழ்ப் பாட நூல்களில் அவ



ருடைய பாடல்களைக் காணலாம். அவரு டைய முழுப் பெயர் **சுப்பிரமணிய பாரதியார்.**

2. சுப்பிரமணிய பாரதியார் **எட்டையா புரம்** என்னும் கிராமத்தில், சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன் பிறந்தார். அவருடைய தந்தையார் பெயர் **சின்னசாமி ஐயர்**; தாயார் பெயர் **இலட்சுமி அம்மாள்.** அவருடைய

ஐந்தாவது வயதில் அன்னை இறந்து விட்டார்.

3. பாரதியாருடைய தகப்பனார் ஒரு தமிழ்ப் புலவர். அவரிடம் பாரதியார் பல தமிழ் நூல்களைக் கற்றுக் கொண்டார்; பாரதியார் இளமையிலேயே தமிழ்க் கவிகள் பாடினார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளையும் கற்றார்.

4. தந்தையார் காலமான பின்பு, பாரதியார் காசியில் அவருடைய அத்தை வீடடைந்து, சிறிது காலம் வசித்து வந்தார். அங்கே இந்தியிலும் வடமொழியிலும் தேர்ச்சி பெற்றார். பாரதியார் தமது இருபதாம் வயதில் எட்டையாபுரத்திற்குத் திரும்பி வந்தார். அக்காலத்தில் அவர் அநேக பாடல்களை இயற்றினார்.

5. பாரதியார் மதுரையில் சில காலம் தமிழ் ஆசிரியராக இருந்தார். பின்பு சென்னையில் ஒரு பத்திரிகை ஆசிரியராக அமர்ந்தார். அந்நியர் ஆட்சியிலிருந்து இந்தியாவை விடுதலை செய்ய அரும்பாடு பட்டார். அதன் பயனாகப் புதுச்சேரியில் குடும்பத்துடன் வசித்தார்.

6. புதுச்சேரியில் பாரதியார் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்தினார். சில

நண்பர்கள் அவருக்கு உதவி செய்தார்கள். ஆயினும், மீண்டும் சென்னையை அடைந்தார். அநேக பாடல்களையும் கதைகளையும் எழுதி வெளியிட்டார். தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் உழைத்து இளைத்த பாரதியார், தமது முப்பத்தொன்பதாவது வயதில் சென்னையில் காலமானார்.

7. நாட்டின் விடுதலையைப்பற்றி அவர் பல பாடல்களைப் பாடினார். "நாட்டில் பிறந்துள்ள நாம் அனைவரும் ஒரு தாய்க்குப் பிறந்தவர்களைப் போல் ஒற்றுமையாக வாழ வேண்டும்" என்ற கருத்தை அவர் பாடினார். பெண்கள் கல்வியில் முன்னேற வேண்டும் என்றும், ஆண்களுடன் சமமாக வாழ வேண்டும் என்றும் அவர் விரும்பினார்; அது பற்றிப் பல பாடல்களைப் பாடினார்; குழந்தைகளுக்காகவும் பல பாடல்களைப் பாடினார்.

8. பாரதியாருக்குத் தமிழ் மொழியில் மிகுந்த பற்று உண்டு. நாம் அவருடைய பாடல்களைக் கற்றுக் கொள்வதன் மூலம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| கவிஞர் | பாடல் | பாடநூல் | கவி |
| மொழி | காலமான | தேர்ச்சி | ஆதரித்து |
| பத்திரிகை | அந்நியர் | விடுதலை | வெளியிட்டார் |
| ஒற்றுமை | முன்னேற | பற்று | நன்றி |

## அருஞ்சொற்பொருள்

கவிஞர் - பாடல்கள் இயற்றுபவர். அந்நியர் - பிறர். பற்று - பிரியம்.

## கேள்விகள்

1. பாரதியாருடைய தாய் தந்தையர் யாவர்?
2. பாரதியார் எங்கெங்கே என்னென்ன மொழிகளைக் கற்றார்?
3. பாரதியார் ஏன் புதுச்சேரிக்குச் சென்றார்?
4. பாரதியார் என்னென்ன கருத்துக்களுள்ள பாடல்களைப் பாடினார்?
5. பாரதியார் காலமானபொழுது அவருக்கு என்ன வயது?

## இலக்கணம்

சுப்ரமணியன், கோபாலன்—ஆண்களின் பெயர்கள்.

இலட்சுமி, வள்ளி, வாணி—பெண்களின் பெயர்கள்.

ஆண்களைக் குறிக்கும் சொற்கள் **ஆண்பால்** எனப்படும்.

பெண்களைக் குறிக்கும் சொற்கள் **பெண்பால்** எனப்படும். (பால் = பிரிவு)

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| மகன் | மகள் |
| பையன் | பெண் |
| தகப்பனார் | தாயார் |
| தம்பி | தங்கை |
| மாமா | மாமி |

## பயிற்சி

1. தகப்பனார், அன்னை, இளமை, கவி, மொழி, வட மொழி, ஆதரித்து, மீண்டும்—இதே பொருள் உள்ள வேறு சொற்களை எழுது.

2. எதிர்ச் சொற்களை எழுது:

 அறியாதவர், இறந்து, ஆசிரியர், அந்நியர், கஷ்டம், ஒற்றுமை.

3. உன் சொந்த வாக்கியங்களில் அமைக்கவும்:

 புலவர், மீண்டும், தேர்ச்சி, ஆசிரியர், விடுதலை, ஒற்றுமை.

4. பின்வருவனவற்றை ஆண்பால், பெண்பால் பிரித்து எழுது:

 தாயார், பாட்டி, தந்தை, அக்காள், தாத்தா, அண்ணன்.

5. இந்தப் பாடத்தில் மூன்றும் பத்தியில் உள்ள ஒருமை, பன்மைச்சொற்களை எடுத்து எழுது.

# 17. கொட்டு முரசே !



1. வெள்ளை நிறத்தொரு பூனை-எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்;
பிள்ளைகள் பெற்றதப் பூனை;-அவை
பேருக் கொரு நிறமாகும்.

2. எந்த நிறமிருந் தாலும்-அவை
யாவும் ஒரேதர மன்றோ ?
இந்த நிறம்சிறி தென்றும்-இஃது
ஏற்ற மென்றும் சொல்ல லாமோ ?

3. அன்பென்று கொட்டு முரசே !-மக்கள்
அத்தனை பேரும் நிகராம் ;
இன்பங்கள் யாவும் பெருகும்-இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்.

4. ஒன்றென்று கொட்டு முரசே!- அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே!-இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

—பாரதியார்

| | | | | |
|---|---|---|---|---|
| கண்டீர் | தரம் | ஏற்றம் | நிகர் | பெருகும் |
| கொட்டு | முரசு | ஓங்கு | நன்று | நானிலம் |
| மாந்தர் | அத்தனை | | | |

### அருஞ்சொற்பொருள்

கண்டீர்-பார்த்தீர். தரம்-வகை. ஏற்றம்-மேன்மை. நிகர்-சமம். முரசு-தோல் வாத்தியம். நன்று-நல்லது. நானிலம்-உலகம். மாந்தர்-மக்கள்.

### கேள்விகள்

1. நிறங்களில் ஏற்றத்தாழ்வு ஏன் சொல்லக் கூடாது?
2. இன்பங்கள் எப்பொழுது அதிகமாகும்?
3. இந்தப் பாடலில் சொல்லப்படும் உண்மை என்ன?

---

## 18. உலோகங்கள்

*[உரையாடல்]*

(பத்மா ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள்.)

**பத்மா:** அம்மா! இந்தக் கிண்ணம் எதனால் செய்யப்பட்டது?

**தாயார்** : பத்மா ! இது **வெள்ளியால்** செய்யப்பட்டது.

**பத்மா** : அம்மா! 'வெள்ளி' என்பது என்ன ?

**தாயார்** : அது ஓர் **உலோகம். பொன், வெள்ளி, இரும்பு, ஈயம், செம்பு** முதலியவை **உலோகங்கள்** எனப்படும்.

**பத்மா** : இவை எங்கே கிடைக்கின்றன?

**தாயார்** : இவை பூமியின் கீழிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன. பூமியின் கீழ் ஆழத்தில் உள்ள மண், கல் முதலியவை களோடு இவை கலந்து இருக்கும். இவை களைத் தோண்டி எடுக்கும் இடங்கள் **சுரங் கங்கள்** எனப்படும்.

**பத்மா** : பூமிக்குள்ளிருந்து எடுத்த பின் அவற்றை என்ன செய்கிறார்கள் ?

**தாயார்** : அவற்றை உருக்கி மண் முத லியவற்றை நீக்கிச் சுத்தம் செய்கிறார்கள்.

**பத்மா** : வெள்ளி என்ற பெயர் அதற்கு ஏற்பட்டது ஏன், அம்மா ?

**தாயார்** : வெண்மை நிறமுள்ளது என்ற காரணத்தால் அப்பெயர் பெற்றது.

**பத்மா** : வெள்ளி எப்படிப் பயன் படும் ?

**தாயார் :** அது நகை, நாணயம், பாத்திரம் முதலியவை செய்யப் பயன்படுகிறது. ரூபாய் நாணயத்தில் வெள்ளி சேர்க்கப்பட்டிருக்கிறது. சில நோய்களுக்கு வெள்ளி பஸ்பம் மருந்தாக உதவுகிறது.

**பத்மா :** அம்மா, **தங்கம்** என்று சொல்கிருர்களே, அது யாது?

**தாயார்:** தங்கமும் உலோகம்தான். அது தான் எல்லா உலோகங்களைக் காட்டிலும் சிறந்தது. தங்கம் தனிப்பட்ட ஒளி மிக்க பொருள். அதனுடன் சிறிது செம்பு கலந்தால் **பொன்** ஆகும்.

**பத்மா :** தங்கம் மாத்திரம் ஏன் விலை உயர்ந்தது?

**தாயார் :** மற்ற உலோகங்களைப்போல் தங்கம் மிகுதியாகக் கிடைக்காது. மேலும், அது மிகப் பளபளப்பும் நயமும் உடையது. பொன்னிலோ தங்கத்திலோ துருப் பிடிப்பதில்லை.

**பத்மா:** பொன்னின் பயன் நகை செய்வது மாத்திரம் தானா?

**தாயார் :** வெள்ளியால் நாணயங்கள் செய்வது போலப் பொன் நாணயங்களும் செய்யப்படுகின்றன. தங்கபஸ்பம் மருந்தாகிறது.

**பத்மா :** இரும்பைப் பற்றியும் எனக்குக் கூறுங்கள்.

**தாயார் :** இரும்பு உறுதியானது; மிகவும் உபயோகமுள்ளது. அதன் நிறம் வெண்மை; ஆனால் காற்றும் தண்ணீரும் அதைக் கருமையாக்குகின்றன. ஆதலால் இதற்குக் **கரும்பொன்** என்ற பெயர் வழங்குகிறது. இது மிகுதியாகக் கிடைக்கிறது. உலைக்களத்தில் **கொல்லர்** இரும்பைக் காய்ச்சுவார். காய்ச்சின இரும்பைச் சம்மட்டியால் அடித்துக் கத்தி, பூட்டு, ஆணிகள், மண்வெட்டி, கரண்டி, சுத்தி முதலிய பல பொருள்களைச் செய்வார்.

**பத்மா :** **செம்பு** என்பது என்ன ?

**தாயார் :** செம்பும் ஓர் உலோகந்தான். அதன் நிறம் சிவப்பு. அதனால் தவலை, குடம், செம்பு, தட்டு முதலிய பொருள்களைச் செய்வார்கள். செப்புப் பாத்திரங்களில் களிம்பு ஏறும். அவைகளுக்கு ஈயம் பூசினால், களிம்பு ஏறாது.

**பத்மா :** **பித்தளை, வெண்கலம்** என்பவையும் உலோகங்களா ?

**தாயார் :** ஆம். அவை கலப்பு உலோகங்கள். செம்பும் துத்தநாகமும் சேர்ந்தது

பித்தளை ; செம்பும் வெள்ளீயமும் சேர்ந்தது வெண்கலம். இவற்றால் பாத்திரங்கள் செய்வார்கள்.

**பத்மா :** **வெள்ளீயம்** என்பது என்ன ?

**தாயார் :** ஈயம் இரு வகைப்படும். அவை **வெள்ளீயம், காரீயம்** என்பன. வெள்ளீயம் சுத்தமானது. அதைப் பாத்திரங்களுக்குப் பூசுவார்கள். பித்தளையில் களிம்பு ஏறும்; ஆதலால் பித்தளைப் பாத்திரங்களுக்கு ஈயம் பூசுவார்கள்.

| | | | |
|---|---|---|---|
| உலோகம் | தோண்டி | சுரங்கம் | உருக்கி |
| விளக்கம் | துரு | களிம்பு | நாணயம் |
| செம்பு | ஈயம் | கனம் | உபயோகம் |
| உலைக்களம் | சம்மட்டி | கரண்டி | சுத்தி |
| பித்தளை | வெண்கலம் | கலப்பு | துத்தநாகம் |
| வெள்ளீயம் | காரீயம் | பூசுதல் | மிகுதி |

### அருஞ்சொற்பொருள்

தோண்டி-பூமியை வெட்டி. மிகுதி-அதிகம்.

### கேள்விகள்

1. உலோகங்களில் என்னென்ன வகைகள் உள்ளன ?
2. சுரங்கம் என்பது என்ன ?
3. வெள்ளியை எவ்வாறு உபயோகிக்கிறோம் ?
4. இரும்பின் நிறம் என்ன ?
5. பித்தளைக்கு ஏன் ஈயம் பூசவேண்டும் ?

## இலக்கணம்

**உலோகம்**—இந்தச் சொல்லில் நான்கு எழுத்துக்கள் இருக்கின்றன—உ-லோ-க-ம். இதுவரை நீ கற்றுக் கொண்ட எழுத்துக்களைக் கவனித்து, **நீ இதுவரையில் கற்றுக் கொள்ளாத எழுத்துக்களைக் கற்றுக் கொள்.**

பல எழுத்துக்கள் சேர்ந்தது ஒரு **சொல்.**

பல சொற்கள் சேர்ந்தது ஒரு **சொற்றொடர்.**

**பல சொற்கள் சேர்ந்து ஒரு முழுக் கருத்தைக் கொடுப்பது ஒரு வாக்கியம். பல வாக்கியங்களில் ஒரு பொருளை விளக்குவது ஒரு பத்தி.**

### பயிற்சி

1. **களிம்பு**—இந்தச் சொல் பாடத்தில் எங்கெங்கே வந்திருக்கிறது?
2. **சம்மட்டி**—இதன் உபயோகம் என்ன? இதை உபயோகிப்பவர் யார்?
3. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்கவும்:
   உலோகங்கள் எடுக்கப்படும் இடங்களுக்குச் —— என்பது பெயர்.

பொன் மிகவும் விலை ——.

தங்கம் என்பது —— பொன்.

இரும்பு —— உலோகம்.

பித்தளையில் களிம்பு ——.

4. நாணயம், உலைக்களம், துரு, களிம்பு, சுரங்கம்— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

# 19. நல்ல தீர்ப்பு

1. முன்னொரு காலத்தில் **மகதபுரி** என்னும் நகரத்தில், **கமலாகரன்** என்னும் பெயருள்ள வணிகன் ஒருவன் இருந்தான். அவன், அவ்வூரிலும் வெளியூர்களிலும் வியாபாரம் செய்து வந்தான். அவன் அடிக்கடி **தரும சீலன்** என்ற கனவானிடம் பணம் கடன் வாங்கிக் கொள்வது வழக்கம். வாங்கிக் கொண்ட கடன் தொகையைத் தவறாமல் திருப்பிக் கொடுத்து விடுவான்.

2. ஒரு சமயம் கமலாகரன், இரண்டு மாதங்களில் திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லிக் கடனாகச் சிறிது தொகையைத் தருமசீலனிடமிருந்து பெற்றுக் கொண்டான். இரண்டு மாதங்களுக்குப் பிறகும் அவன் தருமசீலனுக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை. மேலும் இரண்டு வாரங்கள் சென்றன. தருமசீலன் கமலாகரனிடம் சென்று, பணத்தைக் கொடுக்கும்படி கேட்டான். "உன் பணத்தை நான் கொடுத்து விட்டேனே" என்றான் கமலாகரன். தருமசீலன் திகைத்துப் போனான்; வருத்தத்துடன் வீட்டிற்குச் சென்றான்.

3. அடுத்த நாள் தருமசீலன் அவ்வூரிலிருந்த நீதி மன்றத்திற்குச் சென்றான்;

நீதிபதி **மகிபாலனிடம்** பிராது செய்து கொண்டான். நீதிபதி கமலாகரனை நீதி மன்றத்திற்கு வரவழைத்து, வழக்கை விசாரித்தார். கமலாகரன் நீதிபதியிடம், "கனம் நீதிபதி அவர்களே! நான் தருமசீலரிடம் பல முறை கடன் வாங்கி இருக்கிறேன். வாங்கின



கடனை ஒழுங்காகத் திருப்பிக் கொடுத்திருக்கிறேன். கடைசியாக வாங்கின கடனைத் தருமசீலருடைய கையிலேயே கொடுத்து விட்டேன். அவ்வாறு சத்தியமும் செய்கிறேன்" என்று கூறினன்.

4. நீதிபதி தருமசீலரைப் பார்த்து, "நீர் இதற்கு என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டார். தருமசீலர், "கடன் தொகையைத் திருப்பிக்கொடுத்து விட்டேன் என்று கமலாகரர் சத்தியம் செய்தால், நான் வழக்கைத் தொடர்வதில்லை," என்று மறுமொழி அளித்தார்.

5. நீதிபதி கமலாகரனைப் பார்த்து, "இந்தப் புத்தகத்தின் மேல் ஆணையாக நீர் சத்தியம் செய்வீரா?" என்று கேட்டார். பிரதிவாதி கமலாகரன், "ஆகா, அப்படியே செய்கிறேன்," என்று சொல்லிக் கொண்டே வாதி தருமசீலனிடம் சென்றான்; தன் கைத் தடியை அவனிடம் கொடுத்து விட்டு, நீதிபதி யின் அருகில் சென்று, "கடன் வாங்கின தொகையை வாதியின் கையில் நானே கொடுத்துவிட்டேன். இது சத்தியம்" என்று புத்தகத்தின் மேல் ஆணையிட்டுச் சொன்னான். வாதியிடத்தில் கொடுத்திருந்த கைத்தடியைத் திரும்ப வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் புறப் பட்டான் கமலாகரன்.

6. நீதிபதி கமலாகரனை அழைத்து, கைத்தடியை அவனிடமிருந்து வாங்கி, தரும சீலனிடம் கொடுத்தார். "நீர் கமலாகரனுக்குக் கொடுத்த கடன் தொகைக்குப் பதிலாக இந்தத் தடியைப் பெற்றுக் கொள்ளும்" என்றார். தருமசீலன் விழித்தான். அப்போது நீதிபதி கைத்தடியை எடுத்து ஒடித்தார்; அதிலிருந்து நாணயங்கள் கலகல வென்று விழுந்து உருண்டு ஓடின. அதை வாதி எண்ணிப் பார்த்தான். கமலாகரன் கொடுக்க வேண்டிய தொகை அதில் சரியாக இருந்தது.

அந்தத் தொகையை எடுத்துக் கொள்ளும்படி வாதியிடம் நீதிபதி சொன்னார். அவனும் சந்தோஷமாக அதைப் பெற்றுக்கொண்டான்.

7. "தாங்கள் எப்படி இதைக் கண்டு பிடித்தீர்கள்?" என்று நீதிபதியைத் தரும சீலன் கேட்டான். "பிரதிவாதி சொல்வதில் உண்மை இருந்தது. சத்தியம் செய்வதற்கு முன் உம்மிடம் தான் தன் கைத் தடியை அவர் கொடுத்தார். அதற்குப் பிறகே சத்தியம் செய்தார். அவர் சத்தியம் செய்தபொழுது, "தருமசீலர் கையில் கொடுத்து விட்டேன்" என்று கூறினார். கைத்தடி உமது கையிலிருந்தது. ஆதலால், உமது கடன் தொகை கைத்தடியில் இருக்கவேண்டும் என்று முடிவு செய்தேன்" என்றார் நீதிபதி. அவருடைய நுண்ணறிவைக் கண்டு தருமசீலரும் மற்றும் பலரும் வியந்து போற்றினார்கள்.

| | | |
|---|---|---|
| வணிகன் | வியாபாரம் | கனவான் |
| தொகை | தவறாமல் | சமயம் |
| கடன் | திகைத்து | நீதிமன்றம் |
| நீதிபதி | பிராது | வரவழைத்து |
| வழக்கு | சத்தியம் | தொடர்வது |
| ஆணை | வாதி | பிரதிவாதி |
| புறப்படுதல் | விழித்தான் | உருண்டு |
| சந்தோஷம் | முடிவு | நுண்ணறிவு |

## அருஞ்சொற்பொருள்

வணிகன் - வியாபாரி. கனவான் - மரியாதைக்கு உரியவர். தவறு - பிசகு. நீதிமன்றம் - நியாய சபை.

## கேள்விகள்

1. தருமசீலன் பணத்தைத் திருப்பிக் கேட்டபொழுது கமலாகரன் என்ன சொன்னான்?
2. நீதிபதியிடம் கமலாகரன் என்ன சொன்னான்?
3. கமலாகரன் எப்படிச் சத்தியம் செய்தான்?
4. தருமசீலன் பணத்தைத் திரும்பப் பெற்றது எப்படி?

## இலக்கணம்

ஒரு வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அறிந்தீர்கள். கேள்வி வாக்கியத்தின் முடிவில் கேள்விக் குறி (?) இட வேண்டும். (உ-ம்) நீ பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டாயா?

## பயிற்சி

1. எதிர்ச் சொற்களை எழுது:
   உள்ளூர், முன்பு, கடைசி, சத்தியம், உண்மை, வாதி, சரி.
2. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:
   கலகலவென்று, ஆணை, வழக்கு, வணிகன், நீதிமன்றம், வெளியூர்.
3. நீதிபதியின் தீர்ப்பைத் தருமசீலன் சொல்லுவதுபோல் ஐந்து வாக்கியங்களில் எழுது.
4. வாக்கியங்களின் கடைசியில் ஏற்ற குறிகளை இடு:

தருமசீலன் கமலாகரனிடம் கடன் வாங்கினான்

கமலாகரன் செய்தது நியாயம் ஆகுமா

கைத்தடியைக் கமலாகரன் வணிகனிடம் கொடுத்தான்

நீ சத்தியம் செய்வாயா

நீர் என்ன சொல்கிறீர்

5. இந்தக் கதையை வகுப்பில் சில பிள்ளைகளுடன் நடித்துக் காட்டு.

---

# 20. தமிழ்நாடு

1. **பாரத நாடு** நமது தாய்நாடு. அதில் ஒரு பகுதி **தமிழ் நாடு**. தமிழ் நாடு பாரதத்தின் தென்பகுதியில் உள்ளது. **தமிழ் மொழி**யைத் **தாய்மொழி**யாகக் கொண்டவர் **தமிழர்** எனப்படுவர்.

2. முன்காலத்தில் தமிழ் நாடு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை **சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு** என்பன. அவற்றை முறையே **சேரர், சோழர், பாண்டியர்** என்ற மூன்று தமிழ் மன்னர்கள் ஆண்டு வந்தனர். சோழரும் பாண்டியரும் ஆண்டு வந்த பகுதிகளே இப்பொழுது தமிழ்


தமிழ் நாடு
சோழர்
காவேரி
வங்காளவிரிகுடா
அரபிக்கடல்
தொண்டி
சேரர்
உறையூர்
முசிறி
மதுரை
பாண்டியர்
வஞ்சி
கொற்கை
இலங்கை
இந்திய சமுத்திரம்

நாட்டில் உள்ளன. சேர நாடு இப்பொழுது மலையாளப் பகுதியாக உள்ளது.

3. தமிழ் நாட்டில் பல நதிகள் பாய்கின்றன. **காவிரி, பாலாறு, தாமிரவருணி, வைகை** முதலிய ஆறுகள் தமிழ்நாட்டை நீர் வளமும், நிலவளமும், குடிவளமும் உள்ளதாகச் செய்கின்றன. இதில் அநேக மலைகளும், மரங்கள் நிறைந்த காடுகளும் உள்ளன; உணவுக்கான தானியங்கள் மிகுதியாகப் பயிர் செய்யப்படுகின்றன; நெல், கரும்பு, வாழை, தென்னை முதலான பயிர்கள் ஏராளமாக விளைகின்றன.

4. தமிழர் கைத்தொழில்களில் சிறந்தவர்கள். நெசவுத் தொழில் செய்து பலர் வாழ்ந்து வருகிறார்கள். உழவுத் தொழில் செய்து உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள்.

5. தமிழ் பழமையான மொழி. 'தமிழ்' என்றால் 'இனிமை' என்பது பொருள். **ஒளவையார்** எழுதியுள்ள **நீதி நூல்கள், திருவள்ளுவர்** எழுதிய **திருக்குறள், கம்பர்** எழுதிய **இராமாயணம்** முதலான பல நூல்கள் தமிழ் மொழியை அலங்கரிக்கின்றன. தமிழர் ஒவ்வொருவரும் தமிழ்மொழியை

நன்றாகக் கற்கவேண்டும்; அம்மொழியை வளர்க்க உதவி புரிய வேண்டும்.

6. தமிழ் நாட்டில் உள்ள மக்கள் பல மதங்களைப் பற்றியிருக்கின்றனர். ஆனால் மொழி அனைவருக்கும் ஒன்றே. தமிழர் அனைவரும் ஒற்றுமையாகவும் அன்புடனும் வாழவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| தாய்நாடு | தென்பகுதி | தமிழர் | மன்னர் |
| உள்ளன | நதி | நீர்வளம் | நிலவளம் |
| ஏராளமாக | பழமை | மதம் | வழிபாடு |

## அருஞ்சொற்பொருள்

மன்னர்-அரசர். ஏராளமாக-அதிகமாக. வழிபாடு-பூசை.

## கேள்விகள்

1. தமிழர் என்பவர் யார்?
2. முன்காலத்தில் தமிழ் நாட்டில் இருந்த மூன்று பிரிவுகள் எவை?
3. தமிழ் நாட்டின் வளத்திற்கு என்ன காரணம்?
4. தமிழிலுள்ள சிறப்பான நூல்கள் எவை?
5. தமிழ் நாட்டின் விளைபொருள்கள் என்னென்ன?

## பயிற்சி

1. பின்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:

தாய்மொழி, பகுதி, நீர்வளம், நிலவளம், ஏராளம், வழிபாடு.

2. எதிர்ச் சொற்களை எழுது :

காடு, நிறைந்த, ஏராளம், பழமை, நீதி.

3. பின்வரும் சொற்களுக்கு இதே பொருள் கொண்ட வேறு சொற்களைக் கூறுக :

மன்னர், நதி, மக்கள், ஆண்டு, அலங்காரம்.

4. பின்வரும் சொற்களுக்கு இருபொருள்களைக் கூறுக : மாலை, ஆண்டு.

---

## 21. எங்கள் தமிழ் நாடு

1. என்றும் தலைவணங்கா எங்கள் தமிழ் [நாடு,
ஏழைகளை ஆதரித்து ஈயும் தமிழ் நாடு.

2. வீரத் தமிழ் மறவர் வெற்றித் தமிழ் [நாடு,
வேற்றூருக் காரரையும் போற்றும் [தமிழ் நாடு.

3. எட்டாத காலம் முதல் ஏற்றம் பெறும் [நாடு,
செட்டாக வாழ்வதற்குத் தெரியாத [தமிழ் நாடு.

4. தெள்ளுந் தமிழ் மொழியில் தேமதுரப்
[பாட்டிசைத்து,
வெள்ளம் பெருக்கெடுத்து மேவும் தமிழ்
[நாடு.

5. அம்புவியில் ராமகதை ஆயிரம்பேர்
[சொன்னாலும்,
கம்பனது காவியம்போல் காணக்
[கிடையாது.

6. ஒருசுவை உண்டிசெய்து உண்பார்கள்
[மற்றவர்கள்,
அறுசுவை உண்டிசெய்து அன்பாய்ப்
[படைத்திடுவோம்.

7. கச்சைகட்டிக் கொண்டெதிர்த்த கட்ட
[பொம்ம நாயக்கனும்,
ஒச்சமொன்றும் சொல்லவொண்ணா
[ஊமைத்துரை மகனும்,

8. அவதாரம் செய்திருந்து அன்னியனைச்
[சண்டையிட்டு,
ஆட்டி வைத்துப் பேர்படைத்த
[அருமைத் தமிழ் நாடு!

—கொத்தமங்கலம் சுப்பு.

| | | |
|---|---|---|
| தலைவணங்கா | வீரம் | மறவர் |
| வெற்றி | வேற்றார் | ஆதரித்து |
| எட்டாத | ஏற்றம் | செட்டு |
| தெள்ளு | தேமதுரம் | மேவும் |
| அம்புவி | காவியம் | கச்சை |
| ஓச்சம் | ஒண்ணாத | அவதாரம் |
| அருமை | எதிர்த்த | |

## அருஞ்சொற்பொருள்

வெற்றி - ஜெயம். வேற்றார் - வேறு தேசம். தேமதுரம் - தேன்போல் இனிப்பு. அம்புவி - அழகிய பூமி. ஓச்சம் - குறை. ஒண்ணாத - முடியாத.

## கேள்விகள்

1. தமிழ்நாடு என்னவென்ன வகைகளில் பெருமை பெற்றுள்ளது?
2. அன்னியனை எதிர்த்துச் சண்டையிட்ட தமிழர் யாவர்?

---

# 22. கிராம ஆட்சி



1. ஒரு குடும்பத்தின் தலைவர் தகப்பனார்; பல குடும்பங்கள் சேர்ந்தது ஒரு **கிராமம்.** அந்தக் கிராமத்தை நடத்த ஒரு தலைவர் வேண்டும் அல்லவா? கிராம ஆட்சியை நடத்துபவர் **மணியக்காரர்** அல்லது **முனிசீப்** என்பவர். அவருக்கு உதவியாகக் **கணக்கப் பிள்ளை, வெட்டியான், தலையாரி** என்பவர்கள் இருக்கின்றனர்.

2. மணியக்காரர் அரசாங்கத்தாருக்குக் குடி மக்கள் கட்டவேண்டிய நில வரியை வசூல் செய்வார்; வசூல் செய்த வரிப் பணத்தைக் கஜானுவுக்கு அனுப்புவார். வரி வசூல் செய்வதில் தலையாரி மணியக்காரருக்கு உதவி செய்வார். கிராமத்தில் ஏற்படும் பிறப்பு இறப்புக்களை மணியக்காரர் குறித்து வைப்

பார். கிராமத்தில் மக்கள் செய்யும் சிறு குற்றங்களை விசாரிப்பார்; குற்றம் செய்தவர்களுக்கு அபராதம் விதிப்பார்; பெரிய குற்றங்கள் நடந்தால் அவற்றை மேலதிகாரிகளுக்குத் தெரிவிப்பார்.

3. கிராமத்தில் உள்ள விளை நிலங்களைக் கணக்கப்பிள்ளை அளந்து கணக்கு எடுப்பார்; நிலச் சொந்தக்காரர் கொடுக்க வேண்டிய வரிப் பணத்திற்குக் கணக்கு எழுதி மணியக்காரரிடம் கொடுப்பார்; கொடுக்கப்பட்ட வரிப் பணத்தின் கணக்குகளை வைத்துக்கொள்வார். அவரிடம் நிலங்களை அளப்பதற்கு ஒரு பெரிய சங்கிலியும் நீண்ட கோலும் இருக்கும். வெட்டியான் நிலங்களை அளக்க உதவி செய்வார்.

4. தலையாரி கிராமத்தைக் காவல் புரிவார். மணியக்காரர் வசூல் செய்யும் வரிப் பணத்தை வெட்டியான் கஜானாவில் செலுத்துவார். கிராம மக்களுக்கு மணியக்காரர் சொல்லவேண்டிய செய்திகளைத் தண்டோரா போடுவதும் வெட்டியான் வேலை தான்.

5. இவர்கள் பொதுவாகக் **கிராம ஊழியர்கள்** எனப்படுவார்கள். இவர்கள் அரசாங்

கத்தாரால் அமர்த்தப்படுகிறார்கள்; மாதா மாதம் அரசாங்கத்திலிருந்து சம்பளம் பெறுகிறார்கள்.

6. கிராமங்களில் தெருக்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வது, கல்விச்சாலைகள் அமைப்பது, சுகாதாரத்தைக் கவனிப்பது, தெரு விளக்குகள் போடுவது முதலான வேலைகளைப் **பஞ்சாயத்துச் சபைகள்** செய்து வருகின்றன.

7. கிராம மக்கள் **வாக்குக்** கொடுத்துத் தேர்ந்தெடுக்கப் படுகிறவர்கள் பஞ்சாயத்துச் சபையில் பதவி ஏற்பார்கள். அவர்களுக்குச் சம்பளம் இல்லை. கிராம ஊழியர்களும், பஞ்சாயத்துச் சபையினரும், கிராமங்களை ஆட்சி புரிகின்றனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | அல்லவா | குடிமக்கள் |
| அரசாங்கம் | நிலவரி | வசூல் |
| வரிப்பணம் | கஜானா | பிறப்பு |
| இறப்பு | குறித்து | குற்றம் |
| அபராதம் | விதிப்பார் | மேலதிகாரி |
| விளைநிலம் | சொந்தக்காரர் | சங்கிலி |
| கோல் | காவல் | செய்தி |
| தண்டோரா | பொது | ஊழியர் |
| அமர்த்த | சம்பளம் | கல்விச்சாலை |
| சுகாதாரம் | கவனித்தல் | வாக்கு |
| தர்ந்தெடுத்தல் | சபை | |

## அருஞ்சொற் பொருள்

கஜானு - அரசாங்க நிதிச்சாலை. தண்டோரா - தமுக்கு. ஊழியர்-சேவகர்.

### கேள்விகள்

1. கிராம ஊழியர்கள் யார் யார் ?
2. மணியக்காரரின் வேலைகள் என்ன ?
3. கணக்கப்பிள்ளை செய்யும் வேலைகள் யாவை ?
4. வெட்டியானுடைய வேலை என்ன ?
5. தலையாரி செய்யும் வேலை என்ன ?
6. பஞ்சாயத்துச் சபைகளின் வேலை என்ன ?
7. கிராமத்தை ஆட்சிபுரிபவர் யார் ?

### பயிற்சி

1. எதிர்ச்சொற்களை எழுது :

   குடிமக்கள், விளைநிலம், பொது ஊழியர்.
2. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:

   வசூல், கஜானு, மாதாமாதம், அபராதம், தண்டோரா.
3. பாடத்தில் ஆறும் பத்தியிலுள்ள பன்மைச் சொற்களை எடுத்து எழுதி, அவைகளுக்கு ஒருமைச் சொற்களை எழுதுக.
4. பின்வரும் வாக்கியங்களில் ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்களாகவும், பன்மைச் சொற்களை ஒருமைச் சொற்களாகவும் மாற்று.

1. தலையாரி கிராமத்தைக் காவல் புரிவான்.
2. கணக்கப்பிள்ளைகள் நிலங்களை அளப்பார்கள்.
3. சிறுவர்கள் சண்டையிட்டார்கள்.
4. கிராமத்தை ஆள்பவர் மணியக்காரர்.

### தெரிந்துகொள்

மேல் + அதிகாரி = மேலதிகாரி. வரி + பணம் = வரிப்பணம். கல்வி + சாலை = கல்விச்சாலை. பூ + மணம் = பூமணம். தலை + வலி = தலைவலி.

---

## 23. போலீஸ்காரர்

1. அடுத்த பக்கத்தில் உள்ள படத்தில் இருப்பவரை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? தெருச் சந்திகளிலும், வேறு பல இடங்களிலும் இவரை நீங்கள் பார்த்திருக்கலாம். இவர் தான் **போலீஸ்காரர்.**

2. நகரில் அமைதியைப் பாதுகாப்பது இவருடைய முதல் வேலை. சண்டை சச்சரவுகள் நடக்கும் இடங்களில் இவரைப் பார்க்கலாம். இவரைக் கண்டவுடன் சண்டை செய்பவர்கள் சண்டையை நிறுத்தி அடங்கி விடுவார்கள். அவர் சண்டை செய்கிறவர்களைப் பிடித்துக்கொண்டு போவார்.

3. திருடுதல், சூதாடுதல், தெருக்களை அசுத்தம் செய்தல், தெருக்களில் தொந்தரவு செய்தல், பிறர் பொருளை ஏமாற்றிப் பறித்தல் முதலியன நடவாதபடி இவர் பார்த்துக்கொள் வார். இக் குற்றங்களைச் செய்பவர்களைக்




கண்டால், அவர்களைப் பிடித்துக் கொண்டு போய், போலீஸ் நிலையத்திலுள்ள கொட்டடி யில் அடைத்துவிடுவார். மறுநாள் அவர் களை நீதி மன்றத்திற்குக் கொண்டு சென்று, தண்டனைக்கு உள்ளாக்குவார்.

4. தெருச் சந்திகளில் நின்றுகொண்டு வண்டிகளின் போக்கு வரவை ஒழுங்கு படுத்துவார். இரவு நேரங்களில் தெருக்கள் தோறும் சென்று காவல் புரிவார். திருவிழாக் களிலும், பொதுக்கூட்டங்களிலும் குழப்பம் எற்படாதபடி பார்த்துக் கொள்வார். காணு மற் போகும் குழந்தைகளைக் கண்டுபிடித்துப்

பெற்றோர்களிடம் சேர்ப்பார். பொருள்கள் திருடப்பட்டாலும், அவற்றைக் கண்டு பிடிக்க முயற்சி செய்வார்.

5. போலீஸ்காரர் பொதுமக்களின் நன்மைக்காகவே பாடுபடுகிறார். மக்களுக்குத் துன்பம் நேரிடாமல் பார்த்துக் கொள்கிறார். ஆகையால், அவர் ஒரு **பொதுநலத் தொண்டர்** ஆவார். அவருக்கு நாம் நன்றி செலுத்துதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| போலீஸ்காரர் | இருப்பவர் | சந்தி |
| அமைதி | பாதுகாப்பது | சண்டை |
| சச்சரவு | சூதாடுதல் | பறித்தல் |
| பிறர் | நடவாதபடி | நிலையம் |
| கொட்டடி | உள்ளாக்குவார் | போக்குவரவு |
| திருவிழா | பொதுக்கூட்டம் | குழப்பம் |
| நேரிடாமல் | தொண்டர் | |

## அருஞ்சொற்பொருள்

சந்தி - கூடும் இடம். அமைதி - சமாதானம். பாதுகாப்பது - காப்பாற்றுவது. பறித்தல் - பிடுங்கிக் கொள்ளுதல். தொண்டர் - ஊழியர்.

## கேள்விகள்

1. போலீஸ்காரருடைய முதல் வேலை என்ன?
2. போலீஸ்காரருடைய மொத்த வேலைகள் யாவை?

3. குற்றம்செய்பவர்களைப் போலீஸ்காரர் என்ன செய்வார்?

4. போலீஸ்காரரைப் பொதுநலத் தொண்டர் என்று சொல்வது எவ்வாறு பொருந்தும்?

## பயிற்சி

1. போலீஸ்காரர், அமைதி, சச்சரவு, கொட்டடி, திருவிழா, குழப்பம், தொண்டர் —இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. எதிர்ச் சொற்களை எழுது:

சண்டை, அமைதி, தொண்டர், நன்மை.

3. இந்தப் பாடத்தில் வந்துள்ள சொற்களில் உயிர் எழுத்துக்களில் ஆரம்பமாகும் சொற்களை அகரவரிசையில் எடுத்து எழுது.

# 24. மழை

1. உன் வீட்டில் உன் தாயார் அடுப்பின் மீது உலைநீர் வைப்பதைப் பார்த்திருக்கிறாய் அல்லவா? அவள் முதலில் உலைப்பாத்திரத்தை மூடுகிறாள். உலைநீர் கொதிக்கும் பொழுது மூடியை எடுக்கிறாள். அப்பொழுது




ஆவி மேலே வருவதை நீ காணலாம். அந்த ஆவியில் உன் சுற்பலகையைக் காட்டு; பின்பு எடுத்துப்பார். கற்பலகையில் பல நீர்த்துளிகளைக் காண்பாய்.

2. மேலே வரும் ஆவிக்கு, **நீராவி** என்பது பெயர். வெப்பம் தண்ணீரை ஆவி

யாக மாற்றுகிறது. நீராவியின் மேல் குளிர்ந்த காற்று பட்டால், அது மீண்டும் தண்ணீராக மாறுகிறது.

3. நமது ஆடைகளைத் துவைத்து வெயிலில் காயப் போடுகிறோம். ஆடைகளிலுள்ள தண்ணீர் சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறுவதால், அவை உலர்ந்து விடுகின்றன.

4. மழையும் இவ்வாறே உண்டாகிறது. கடல், ஆறு, குளம், ஏரி முதலான நீர்நிலைகளிலுள்ள தண்ணீர் சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறுகிறது. ஆவி காற்றைவிட இலேசானது; அதனால் அது மேலே போகிறது; காற்று செல்லும் இடங்களில் எல்லாம் அது உலவுகிறது. வானத்தில் சென்றவுடன் குளிர் காற்று பட்டு, அது **மேகமாக** மாறுகிறது. மேகத்தின் மேல் பின்னும் குளிர்ந்த காற்று பட்டால், அது தண்ணீராகிறது. தண்ணீர் காற்றைவிடக் கனமானது; அதனால்தான் மேகம் மழையாகத் தூறுகிறது.

5. மலை உச்சிகளிலும், அடர்ந்த காடுகளிலும் அதிகமாக மழை பெய்யும். ஏனெனில், அங்கே குளிர்ந்த காற்று அதிகம். மேடான இடங்களில் பெய்யும் மழை நீர்,

பல வாய்க்கால்களாகிப் பள்ளங்களை நோக்கி ஓடி வருகிறது. சில வாய்க்கால்கள் ஏரி குளங்களை நிரப்புகின்றன; சில வாய்க்கால்கள் கூடி ஆறுகளாகின்றன. ஆற்று நீரையும் ஏரி நீரையும் வயல்களுக்குப் பாய்ச்சுகிறோம்; இன்னும் பல வகைகளில் உபயோகப்படுத்துகிறோம்.

6. நீராவி அதிகமாகக் குளிர்ந்தால் அது கருமேகமாகும். கருமேகங்கள் காற்றால் அங்குமிங்கும் தள்ளப்பட்டு, ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும்; அவ்வொலி தான் இடி; மின்னல் மின்னும்; மழை வரும்.

7. மழை இல்லாவிடில் உலகில் ஒரு வேலையும் நடவாது. ஏரி குளங்கள் வறண்டு போகும்; பயிர் பச்சைகள் விளையமாட்டா; மக்களுக்குப் போதுமான குடிநீரும் உணவுப் பொருள்களும் கிடைக்க மாட்டா; பஞ்சம் உண்டாகும்; மனிதர்களும் பிராணிகளும் உயிர் வாழ முடியாது.

8. சூரியனால் தான் மழை உண்டாகிறது. மழை பெய்தால் பயிர்கள் செழிக்கும்; தானியங்கள் விளையும். பயிர்கள் வளர வெப்பமும் வேண்டும். வெப்பத்தைச் சூரியன்

தருகிறான். ஆதலால், மக்கள் உயிர் வாழ்வதற்குச் சூரியனுடைய உதவி மிகவும் தேவை. அதனால்தான் இந்துக்கள் ஆண்டு தோறும் தை மாதம் முதல் நாளன்று பொங்கலிட்டுச் சூரியனை வழிபடுகிறார்கள்.

## "மாரியல்லது காரியம் இல்லை"

| | | | |
|---|---|---|---|
| உலை | கொதித்தல் | புகை | நீர்த்துளி |
| நீராவி | ஆவி | உலர்ந்து | இலேசு |
| ஏனெனில் | மோதி | பயிர்பச்சை | பஞ்சம் |
| இந்து | மாரி | | |

### அருஞ்சொற்பொருள்

மாரி - மழை.

### கேள்விகள்

1. உலைநீர் கொதிக்கும் பொழுது என்ன உண்டாகிறது?
2. நீராவி என்பது என்ன ?
3. ஆடைகள் உலர்வது எப்படி ?
4. மழை எவ்வாறு உண்டாகிறது ?
5. ஆறுகள் எப்படி உண்டாகின்றன ?
6. இடியும் மழையும் எவ்வாறு உண்டாகின்றன ?
7. மழை இல்லாவிட்டால் என்னவாகும்?
8. சூரியனுடைய உதவி மக்களுக்கு ஏன் தேவை ?

### பயிற்சி

1. பின்வரும் சொற்களுக்கு அதே பொருள் உள்ள வேறு சொற்களைக் கூறு:

மீண்டும், வானம், மாரி, தீ, பஞ்சம், வெப்பம்.

2. எதிர்ச் சொற்களை எழுது:

கருமை, அதிகம், மேடு, இலேசு, உச்சி, வாழ்வு.

3. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:

ஒன்றுடொன்று, நீராவி, கருமேகம், அங்குமிங்கும்.

4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைக்கவும்:

காற்றினால் மேகங்கள்——— தள்ளப்படுகின்றன.

இடியும்————மழை வரும்.

தண்ணீர் ——— நீராவி உண்டாகும்.

நீராவி காற்றைவிட———.

5. பின்வரும் சொற்களை க, ங, ச......என்ற முதல் எழுத்துக்களின் வரிசையில் எழுது:

நீராவி, மழை, கனம், சூரியன், மின்னல், மக்கள், பயிர், குளம், தானியம். பொங்கல், வயல், நீர், தண்ணீர், கற்பலகை, வெயில், வானம்.

# 25. நாடு செழித்தது



சோழனது சீமையிலே
சொரிந்ததே நல்ல மழை!
நல்ல மழை பெய்ததனால்
நாடு செழித்ததுவே!
பூமி குளிர்ந்ததுவே,
பொய்கைகள் நிரம்பினவே!
ஏரிகள் நிரம்பினவே,
எதிர்த்ததே ஏகவெள்ளம்!
தடாகங்கள் நிரம்பினவே,
தாமரைகள் பூத்தனவே!
செடிகள் மரங்கள் எல்லாம்
செழித்துத் தழைத்தனவே!
பூக்காத மரங்கள் எல்லாம்
பூத்துச் சொரிந்தனவே!
காய்க்காத மரங்கள் எல்லாம்
காய்த்துப் பழுத்தனவே!
பயிர்கள் விளைந்தனவே
பலனைக் கொடுத்தனவே!
சோழமண்டலம் எல்லாம்
சுகமாய்த் தழைத்ததுவே!

சீமை சொரிந்தது பொய்கை
ஏகவெள்ளம் தடாகம் தழைத்தன
பூக்காத மண்டலம்

### அருஞ்சொற் பொருள்

சீமை - தேசம். பொய்கை - குளம். ஏக - அதிக மான. மண்டலம் - நாடு.

### கேள்விகள்

1. சோழ நாட்டில் மழை பெய்ததால் உண்டான நன்மைகள் யாவை ?
2. மழையினுல் மரஞ்செடிகள் என்னவாயின ?

---

## 26. அரசனும் அமைச்சனும்

1. முன்னெரு காலத்தில், ஓர் ஊரில் **கோபாலன்** என்ற இடையன் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன் மிகவும் ஏழை; ஆடுமாடுகளை மேய்த்து வயிறு வளர்த்து வந்தான். அவன் சந்தோஷமாகவே வாழ்ந்தான்.

2. கோபாலன் சிறந்த அறிவாளி; புத்திகூர்மை உள்ளவன். நாடு முழுதும் அவனது புகழ் பரவிற்று. பல பேர் அவனிடம் சென்று ஆலோசனை கேட்பார்கள். அவனும் மனம் கோணுமல் பதில் சொல்லுவான். **சந்திரவர்மன்** என்ற அந்நாட்டு அரசன் கோபாலனைப்பற்றிக் கேள்விப்பட்டான்; அவனைக்

காண ஆவல் கொண்டான். ஒரு வழிப் போக்கனைப்போல் மாறுவேடம் பூண்டான்; ஒரு குதிரையின்மேல் ஏறிக்கொண்டு, கோபாலனைக் காணச் சென்றான்.

3. கோபாலன், அரசனை அன்புடன் வரவேற்று, வணங்கி உபசரித்தான். இருவரும் வெகு நேரம் பேசிக்கொண்டார்கள். கோபாலனுடைய நுண்ணறிவைக் கண்ட அரசன் ஆச்சரியம் அடைந்தான். கடைசியாக அரசன் கோபாலனைப்



பார்த்து, "நான் ஒரு வழிப்போக்கன். முன் பின் அறியாத என்னை நீர் அன்புடன் வர வேற்று உபசரித்தீர். நான் போக விடை தாரும்" என்றான். கோபாலன், "ஐயா! நீர் வழிப்போக்கர் அல்லர். உமது ஆடைகள் அழுக்கடைந்து இருந்தாலும், விலை உயர்ந் தவை. அவை அரசர்களுக்கே உரியவை. உமது பேச்சும் அரசருக்கு உரியதாகவே

இருக்கிறது. நீர் இந்நாட்டு மன்னர்தான் என் பதில் சந்தேகமில்லை" என்றான்.

4. "ஆம், நீர் சொல்லுவது உண்மை. உம்மைக் காண மாறு வேடத்தில் வந்தேன். உமது மதிநுட்பத்தைக் கண்டு வியப்பு அடைந்தேன். இன்று முதல் நீர் எனக்கு முதல் அமைச்சராக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று அரசன் வேண்டிக் கொண்டான்.

"மகாராஜா! நான் ஓர் ஏழை. நான் அமைச்சராக இருக்கத் தகுந்தவன் அல்லன். சந்தோஷமாகவே இருக்கிறேன். என்னை விட்டுவிடுங்கள்" என்று கோபாலன் கேட்டுக் கொண்டான். அரசன் அதற்கு இணங்க வில்லை. கோபாலனைத் தலைநகருக்கு அழைத் துக்கொண்டு சென்றான். அவனை முதல் மந்திரியாக்கினான்.

5. கோபாலன் ஓர் அழகான மாளிகை யில் வாழ்ந்து வந்தான். அவனுக்கு அநேக வேலையாட்கள் இருந்தனர். அவன் வேலைக் குப் போகும்பொழுதும், வீட்டில் இருக்கும் பொழுதும் ஒரு கைப்பெட்டி அவனுடன் கூடவே இருந்தது.

6. சில ஆண்டுகள் கழிந்தன. நகரத்து மக்கள் பற்பலவாறு கோபாலனைப் பற்றிப் பேசிக்கொண்டனர். பலருக்கு அவன்மேல்

பொருமை உண்டாயிற்று. "கைப்பெட்டியில் நிரம்பப் பொன் நாணயங்கள் இருக்கின்றன. கோபாலன் அரசனை ஏமாற்றிச் சேர்த்து வைத்த செல்வம் அது. அதனால் தான் அதை அவன் தன்னுடனேயே வைத்துக்கொண்டிருக்கிறான்" என்று ஜனங்கள் பேசிக்கொண்டனர். அச்செய்தி அரசனுக்கு எட்டியது. அதுபற்றி அரசனிடத்திலும் பலபேர் கோள் சொன்னார்கள். அரசன் முதலில் அந்த வதந்தியை நம்பவில்லை. ஆனாலும், பெட்டியில் இருப்பது என்னவென்று அறிய ஆவல் கொண்டான்.

7. ஒருநாள் அரசன் கோபாலனைக்காணச் சென்றான். அவனைப் பார்த்து, "உமது கைப் பெட்டியைத் திறந்து காட்டும்" என்றான். கோபாலன் உடனே அதைத் திறந்து காட்டினான். என்ன ஆச்சரியம்! அதில் பலர் சொன்னபடி தங்க நாணயங்கள் இல்லை; பழைய கந்தல் துணிகள் இருந்தன! அரசன் திகைத்து நின்றான்.

8. கோபாலன் மன்னனைப் பார்த்து, "மன்னவரே! நான் இடையனாக இருந்த போது தரித்திருந்த உடைகள் இவை. நான் உமது முதல் அமைச்சன்; ஆனாலும் என் முன்னுள் நிலையை நான் மறக்கவில்லை. இந்தப் பதவியில் என்றென்றும் இருக்க முடியாது.

ஒரு காலத்தில் மீண்டும் என் கிராமத்திற்குச் செல்வேன்; அப்பொழுது இவை உதவும்,'' என்றான்.

9. கோபாலன் தன்னுடைய ஆடையாபரணங்களைக் கழற்றி மன்னனிடம் அளித்தான். "அரசே! மீண்டும் நான் என் ஊருக்குப் போகிறேன். விடை கொடுங்கள்'' என்று சொல்லிவிட்டு, தன்னுடைய பழைய ஆடைகளைத்தரித்துக்கொண்டு, கிராமத்தை நோக்கி நடந்து சென்றான். அரசனுடைய கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகிற்று; "ஒரு புத்திசாலியை இழந்தோமே!'' என்ற வருத்தத்துடன் அரண்மனையை அடைந்தான்.

10. பணமும் பதவியும் கிடைத்தாலும் கர்வம் கொள்ளக்கூடாது.

| | | |
|---|---|---|
| இடையன் | புத்தி கூர்மை | புகழ் |
| ஆலோசனை | கோணமல் | வழிப்போக்கன் |
| சந்தேகம் | பூண்டான் | வரவேற்று |
| உபசரித்து | நுண்ணறிவு | ஆச்சரியம் |
| முன்பின் | விடை | உரியவை |
| மாறுவேடம் | மதிநுட்பம் | வியப்பு |
| மகாராஜா | அல்லன் | இணங்கு |
| தலைநகர் | மந்திரி | மாளிகை |
| பற்பல | பொறுமை | எட்டியது |
| கோள் | வதந்தி | தரித்தல் |
| முன்னாள் | நிலை | ஆபரணம் |
| கழற்றி | அரண்மனை | அடைந்தான் |

TB 031(3) NS
8901З
சென்னை-600 008.



## அருஞ்சொற்பொருள்

கோணுமல்-மாருமல். வழிப்போக்கன்-பிரயாணி. உரியவை-சொந்தமானவை. கோள்-கற்பனை.

## கேள்விகள்

1. சந்திரவர்மன் ஏன் கோபாலனைக் காணச் சென்ருன் ?
2. வழிப்போக்கனை அரசன் என்று கோபாலன் எப்படிக் கண்டுபிடித்தான் ?
3. கோபாலனைப் பற்றி ஏற்பட்ட வதந்தி என்ன?
4. கைப் பெட்டியில் அரசன் கண்டது என்ன ?
5. அரசன் ஏன் வருத்தமடைந்தான் ?

## பயிற்சி

1. வழிப்போக்கன், ஆலோசனை, மாறுவேடம், முன்பின் அறியாத, மதிநுட்பம், தலைநகர்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
2. எதிர்ச்சொற்களை எழுது—ஏழை, மாளிகை, கூடும், வேலையாள்.
3. பின்வரும் வாக்கியங்களில் பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் எடுத்து எழுது:

   கோபாலன் அரசனை வரவேற்ருன்.

   மன்னன் மாறுவேடம் அணிந்துகொண்டான். கோபாலனுடைய கண்களில் நீர் பெருகிற்று. கோபாலன் மாளிகையில் வாழ்ந்தான்.

   அரசன் வதந்தியை நம்பவில்லை.
4. பிரித்து எழுது :

   முதல் மந்திரி, வழிப்போக்கன், தலைநகர், மாறுவேடம், கைப்பெட்டி.

# 27. அன்பின் வெற்றி

## (நாடகம்)

### காட்சி—1

[**அருள்நாதர்** பெருஞ்செல்வர்; ஆடம்பரம் இல்லாதவர்; ஏழை எளியவரிடம் இரக்கமும் உள்ளவர். ஓர் இரவு, அவர் உணவு அருந்திவிட்டுத் தமது அறையில் படுத்துக்கொண்டிருந்தார். எவரோ வாயிற் கதவைத் தட்டும் சத்தம் கேட்டு, கதவைத் திறந்தார்; அங்கே ஓர் எளியவனைக் கண்டார். அவனது தோற்றம் பயங்கரமாக இருந்தது; உணவைக்கண்டு பல நாட்களாயின என்பதை அவன் முகம் காட்டிற்று.]

**அருள்நாதர் :** அப்பா, நீ யார்? ஏன் வெளியே நிற்கிறாய்? உள்ளே வா.

**வந்தவன் :** ஐயா! என் பெயர் **காத்தான்.** நான் உள்ளே வரத் தகுதி இல்லாதவன். இரண்டு நாட்களாக என் வயிற்றுக்கு உணவு இல்லை. சிறிது உணவு வேண்டும்.

**அருள்நாதர் :** அப்பனே! உனக்கு வேண்டிய மட்டும் உணவு அளிக்கிறேன். நீ பயப்படாமல் உள்ளே வா; உண்ணலாம்.

**காத்தான் :** பிரபுவே! நான் ஒரு குற்றவாளி. சிறையிலிருந்து நேற்றுத்தான் விடுதலையானேன். நான் உள்ளே வருவதைத் தாங்கள் விரும்பமாட்டீர்கள்.

**அருள்நாதர் :** தம்பீ! நீ குற்றவாளி யானல் என்ன? நாம் அனைவரும் இறைவ னுடைய குழந்தைகள்; சகோதரர்கள். நீ உள்ளே வந்து சாப்பிடு.

**காத்தான் :** ஐயா! இரண்டு நாட்களா கப் பிச்சை கிடைக்கவில்லை; வேலையும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு வீட்டிலும் என்னை விரட்டி அடித்துவிட்டார்கள். தாங் கள் என்னை வரவேற்கிறீர்கள். நான் சிறை யிலிருந்த கைதியாயிற்றே! தங்களுடைய பொருள்களைக் கண்டால், ஒரு வேளை திருடி னலும் திருடுவேன். உங்களுக்குப் பயமாக இல்லையா?

**அருள் நாதர் :** நண்பா! இங்குள்ள பொருள்கள் என்னுடையவை அல்ல. அவை நாம் வணங்கும் இறைவனுடையவை. எனக் குப் பயம் இல்லை. உள்ளே வா.

[அருள் நாதரும் காத்தானும் மாளிகையினுள்ளே சென்றனர். காத்தான் வயிருரத் தின்ருன். உணவு அருந்தும்பொழுது அங்கிருந்த வெள்ளிச் சாமான்களைப் பார்த்தான்.]

**அருள் நாதர்:** அப்பா! இரவு வெகு நேரமாகி விட்டது. இங்கேயே படுத்து உறங்கு. இதோ, இந்த மஞ்சத்தில் படுத்துக் கொள்.

(போகிருர்)

**காத்தான் :** (படுத்துக்கொண்டு தனக்குள்) ஆ! என்ன அருமையான உணவு! படுக்கையும் சுகமாக இருக்கிறது. இன்று நரி முகத்தில் விழித்திருப்பேன். இங்குள்ள வெள்ளிச் சாமான்களை எடுத்துக்கொண்டால், அவற்றை விற்றுப் பணமாக்குவேன்; பல நாட்கள் உழைப்பின்றிச் சாப்பிடுவேன். ஆனால் இவர் நல்லவர் ஆயிற்றே! இருந்தால் என்ன? இவைகளை எடுத்துக் கொண்டால் அவருக்கு என்ன குறைந்து போகும்? அது தான் சரி.

[காத்தான் நள்ளிரவில் வெள்ளிச் சாமான்களை எடுத்துக்கொண்டு மாளிகையை விட்டுச் சென்றான். காலையில் அவனை அருள் நாதர் தேடினார்; அவனைக் காணவில்லை. வெள்ளிச் சாமான்களையும் காணவில்லை; ஆனால் அவர் வருந்தவில்லை.]

**காட்சி—2**

[காலை மணி எட்டு. இரண்டு ஊர்க்காவலர் காத்தானுடன் அருள்நாதரைக் காண வந்தார்கள். காத்தான் கைகளுக்கு விலங்கு பூட்டப்பட்டிருந்தது. ஓர் ஊர்க் காவலன் கையில் ஒரு சிறு மூட்டை இருந்தது. அருள்நாதர் காத்தானுடைய நிலைமையைக் கண்டு பதைபதைத்தார்.]

**அருள் நாதர் :** அன்பர்களே, இது என்ன? ஏன் இவனுக்கு விலங்கு பூட்டியிருக்கிறீர்கள்? உடனே அதை நீக்குங்கள்.

**காவலர்:** பிரபுவே! இன்று விடியற் காலையில் இவன் பதுங்கிப் பதுங்கி நடந்து சென்றான். இவனை நாங்கள் சந்தேகித்தோம். உடனே பிடித்துக்கொண்டு இவனிடமிருந்த மூட்டையை வாங்கிப் பிரித்தோம். அதில்



தங்களுடைய பெயர் பொறித்துள்ள வெள்ளிச் சாமான்களைக் கண்டோம். இவனே நேற்றுத் தான் சிறையிலிருந்து வெளிவந்த குற்ற வாளி.

**அருள் நாதர்:** என்ன காரியம் செய்தீர் கள்? இந்தச் சாமான்களை நேற்று இரவு நானே இவனுக்கு வெகுமதியாகக் கொடுத் தேன்! இன்னும் சில சாமான்களையும் கொடுக்க விரும்பினேன். அவற்றை எடுக்க உள்ளே சென்றேன். அதற்குள் இவன் சென்று விட்டான். விலங்கைக் கழற்றுங் கள்; இவன் திருடன் அல்லன்.

[பின்பு காத்தானைப் பார்த்து] அப்பா! இந்தா, இந்தச் சாமான்களையும் பெற்றுக் கொள். (ஒரு வெள்ளிக் கிண்ணம் கொடுக்கிறார்.) சந்தோஷமாகப் போய் வா.

[காத்தான் கைவிலங்கு நீக்கப்பட்டது. காவலர் மலைத்து நின்றனர். காத்தான் அருள் நாதரின் காலில் விழுந்து வணங்குகிறான்.]

**காத்தான் :** ஐயனே! அன்னம் இட்ட வீட்டில் கன்னம் வைத்த என்னை மன்னிக்க வேண்டுகிறேன். தங்களால் இன்று சிறைக் குச் செல்லாமல் காப்பாற்றப்பட்டேன். தங்கள் அன்பு என்னைத் தீயவழியிலிருந்து காப்பாற்றியது. இனி என்றும் திருடமாட் டேன். உழைத்து வேலை செய்து பொருள் தேடி வாழ்வேன். தங்களுடைய அன்பை என்றும் மறக்கமாட்டேன். போய் வரு கிறேன். விடைகொடுங்கள்.

**அருள்நாதர் -** அன்பனே! போய்வா. உனக்குக் கடவுள் துணை இருப்பார்.

(காத்தான் போகிறான்.)

| | | |
|---|---|---|
| ஆடம்பரம் | எளியவர் | பயங்கரம் |
| தோற்றம் | தகுதி | வேண்டிய மட்டும் |
| குற்றவாளி | இறைவன் | சகோதரன் |
| பிச்சை | விரட்டி | கைதி |
| திருடு | உறங்கு | மஞ்சம் |

| | | |
|---|---|---|
| ஊர்க்காவலர் | விலங்கு | நிலைமை |
| பதைபதைத்தார் | நீக்கு | விடியற்காலை |
| பதுங்கி | பொறித்த | வெகுமதி |
| மலைத்து | கன்னம் | மன்னிக்க |
| காப்பாற்று | தீயவழி | உழைத்து |

## அருஞ்சொற்பொருள்

ஆடம்பரம் - பகட்டு. தோற்றம் - உருவம். இறைவன் - கடவுள். சகோதரர் - உடன் பிறந்தவர். உறங்கு - தூங்கு. மஞ்சம் - படுக்கையுடன் கூடிய கட்டில். வெகுமதி – பரிசு. மலைத்து - திகைத்து.

## கேள்விகள்

1. காத்தான் யார்?
2. அருள்நாதர் காத்தானை ஏன் உள்ளே அழைத்துச் சென்றார்?
3. படுக்கையில் காத்தான் செய்த யோசனை என்ன?
4. இரவில் காத்தான் என்ன செய்தான்?
5. அருள்நாதர் காத்தானை எவ்வாறு விடுதலை செய்வித்தார்?

## பயிற்சி

1. இந்தக் காட்சிகளை வகுப்பில் சிலர் கூடி நடிக்கவும்.
2. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது :

   ஆடம்பரம், பயங்கரம், குற்றவாளி, பதைபதைத்தல், வெகுமதி.

3. எதிர்ச் சொற்களை எழுது :

கைதி, உறக்கம், சரி, பூட்டு, நல்வழி.

4. பின்வரும் வாக்கியங்களின் கடைசியில் ஏற்ற குறிகளை இடு :

அருள்நாதர் கதவைத் திறந்தார் வெளியே ஓர் எளியவன் நிற்பதைக் கண்டார் "நீ யார்" என்று கேட்டார் என் பெயர் காத்தான் என்று அவன் சொன்னான் ஏன் நிற்கிறாய் உள்ளே வா என்றார் அருள் நாதர்

5. இந்தப் பாடத்தில் வந்துள்ள பெயர்ச்சொற்களை எடுத்து, ஒருமை பன்மை என்று பிரித்து எழுது :

| பெயர்ச் சொல் | ஒருமை | பன்மை |
|---|---|---|
| | | |

## 28. கொன்றைவேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
4. ஈயார் தேட்டை தீயார் கொள்வர்.
5. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
6. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
7. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
8. கிட்டாதாயின் வெட்டென மற.
9. கீழோராயினும் தாழ உரை.
10. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
11. சோம்பர் என்பவர் தேம்பித்திரிவர்.
12. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
13. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
14. தோழனோடும் ஏழைமை பேசேல்.
15. நல்லிணக்கம் அல்லது அல்லற்படுத்தும்.
16. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
17. பாலோடு ஆயினும் காலமறிந்து உண்.
18. மாரியல்லது காரியம் இல்லை.
19. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
20. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.

—ஔவையார்

### குறிப்புரை

(1) முன்னறி-முதலில் அறிந்த. (2) ஆலயம்-கோவில். சாலவும்-மிகவும். (3) இல்லறம்-மனைவி மக்களுடன் வாழ்தல். (4) ஈயார்-(தருமம்) கொடாத வர். தேட்டை-செல்வம். (5) வேருடன்-முற்றும். (6) எண்-கணக்கு. (7) ஔவியம்-வஞ்சம். ஆக்கம்-செல்வம். (8) கிட்டாதாயின்-கிடைக்காது போனால். வெட்டென-உடனே. (11) தேம்பி-வருந்தி. (12) திரைகடல்-அலை வீசுகின்ற கடல். (15) நல்லிணக்கம்-நல்ல சிநேகம். அல்லல்-துன்பம். (16) நுண்ணிய-சிறிய. (19) செய்யின் - செய்தால். மூத்தோர் - பெரியோர்.

---

## 29. வெற்றிவேற்கை

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. உழவர்க் கழகு ஏர் உழு தூண்விரும்பல்.
5. உண்டிக் கழகு விருந்தோடு உண்ணல்.
6. அறிஞர்க் கழகு கற்றுணர்ந்து [அடங்கல்.
7. வறிஞர்க் கழகு வறுமையில் செம்மை.
8. பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்.
9. சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.

10. பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர்.
11. உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்.
12. அடினும் ஆவின்பால் தன்சுவை
[குன்றாது.
13. சுடினும் செம்பொன் தன்னொளி
[கெடாது.
14. அரைக்கினும் சந்தனம் தன்மணம்
[அறாது.
15. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு
[கமழாது.
16. கலக்கினும் தண்கடல் சேறாகாதே.
17. அச்சமும் நாணமும் அறிவிலோர்க்கு
[இல்லை.
18. இரந்தோர்க்கு ஈவதும் உடையோர்
[கடனே.
19. துணையோடு அல்லது நெடுவழி
[போகேல்.
20. வழியே ஏகுக வழியே மீளுக.

—**அதிவீரராம பாண்டியர்**

## குறிப்புரை

(2) கசடு அற - குற்றம் நீங்க. (3) செழுங்கிளை - (செழுமை, கிளை) மிகு உறவினர். (6) கற்றுணர்ந்து - பல நூல்களைக் கற்றுப் பொருளை அறிந்து. (7) வறி

ஞர் - ஏழைகள். (10) பெற்ருேர்-பெறப்பட்ட மக்கள். (11) உற்ருேர் - உறவினர். (11) அடினும் - நன்ருகக் காய்ச்சினுலும். ஆவின்பால் - பசும்பால். (15) கார் அகில் - கருமையான அகில் கட்டை. (வயிரம் ஏறியது). பொல்லாங்கு - தீயமணம். கமழாது-மணக் காது. (15) தண் - குளிர்ச்சி பொருந்திய. (18) உடையோர் - செல்வம் உடையவர்கள். (19) நெடுவழி - நெடுந்தூரம். (20) ஏகுக - செல்லுக. மீளுக- திரும்புக.

---

## 30. வாழ்க பாரதம்!

வாழ்க நல்லறம்! வாழ்க சுதந்திரம்!
வாழ்க செல்வம் வளர்க்கும் தொழில்
[எல்லாம்!
வாழ்க செந்தமிழ்! வாழ்க நம் பாரதம்!
வாழ்க **காந்தி மகான்** நிலத்(து) என்றுமே!

—**கவிமணி**

# இருநூற்றுப் பதினாறு உயிர்மெய் எழுத்துக்கள்

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

ஶ்ரீ

## வடமொழி எழுத்துக்கள்

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜ் | ஜ | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ | ஜெ | ஜே | ஜை | ஜொ | ஜோ | ஜௌ |
| ஹ் | ஹ | ஹா | ஹி | ஹீ | ஹு | ஹூ | ஹெ | ஹே | ஹை | ஹொ | ஹோ | ஹௌ |
| ஸ் | ஸ | ஸா | ஸி | ஸீ | ஸு | ஸூ | ஸெ | ஸே | ஸை | ஸொ | ஸோ | ஸௌ |
| ஷ் | ஷ | ஷா | ஷி | ஷீ | ஷு | ஷூ | ஷெ | ஷே | ஷை | ஷொ | ஷோ | ஷௌ |
| க்ஷ் | க்ஷ | க்ஷா | க்ஷி | க்ஷீ | க்ஷு | க்ஷூ | க்ஷெ | க்ஷே | க்ஷை | க்ஷொ | க்ஷோ | க்ஷௌ |

கற்பக நூலகம்
89013



# Siruver Thenral Vachakam

Book III For Standard III

*By*

V. K. Seshadri B. A., L. T.

Price As. 0—8—0

ROYAL PUBLISHERS

Teppakulam P. O., Trichy.